# திருமறைத்தீபம்

**BIBLE LAMP**

மலர் 3 ஜனவரி - மார்ச் 1997 இதழ் 1


## ஒரு வேண்டுகோள்

வாசகர்கள் முகவரி மாறும்போது தயவு செய்து உடனடியாக எமக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறோம். அத்தோடு சரியான முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். இதன் மூலம் பத்திரிகையை நீங்கள் இடையராது தொடர்ந்து பெறவும், தபால் செலவைக் குறைக்கவும் எமக்குத் துணை புரியலாம். புதிய வாசகர்கள் இதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## இந்த இதழில்


- திருச்சபை
- வில்லியம் கேரி
- கிருபையின் போதனைகள்
- சுவிஷேசக் கோட்பாடு
- புத்தக விமர்சனம்
- கேள்வி? - பதில்!
- எண்ணங்கள்


# எது கிறிஸ்தவம்?

இது என்ன புதுக் கேள்வி என்று நீங்கள் வியக்கலாம். ஆனால் இது இன்று தமிழ் மக்கள் மத்தியில் உலவி வரும், கேட்க வேண்டிய ஒரு கேள்வி. கிறிஸ்தவம் என்ற பெயரில் காலான்கள் போல் எங்கும் தன்னிச்சையாக இயங்கும் நிறுவனங்களும், பரவசத்தையும், அற்புதங்களையும் மட்டும் நாடி ஓடும் பரவசக்கூட்டமும், இது போதாதென்று சிரித்துக்கூத்தாடும் சிரிப்பலை சிலந்தியின் வலையில் அகப்பட்டிருக்கும், சிந்திக்க மறுப்போரும் அலைபோல் பரந்திருக்கும் இக்காலத்தில் திருமறையை மட்டும் நாடி நிற்கும் எவரும் கேட்க வேண்டிய நியாயமான கேள்வி இது. மெய்க்கிறிஸ்தவர்கள் யார்? திருமறை பூர்வமான மெய்க் கிறிஸ்தவத்தைப் பின்பற்றும் சபைகள் யாவை என்று கண்டுணர வேண்டிய காலமிது. கர்த்தரை நிராகரித்துக் காலத்தோடு ஓடமுனைந்த இஸ்ரவேலரைப் போல சுவிஷேசக் கோட்பாட்டை நிராகரித்து புதுமையை நாடியோடும் கூட்டத்தார் பெருகி வரும் இக்காலத்தில் கேட்க வேண்டிய கேள்விதான் இது. திருமறைபூர்வமான சுவிஷேசக் கோட்பாடு யாது? அதற்கு ஏற்பட்டுள்ள ஆபத்து என்ன என்று கிறிஸ்தவர்கள் இன்று புரிந்து கொள்ள முயல வேண்டும். இவ்விதழில் இதைக்குறித்து விளக்கமாக 'சுற்றுச்சூழலால் பாதிக்கப்பட்டிருக்கும் சுவிஷேசக் கோட்பாட்டியக்கம்' என்ற கட்டுரை ஆராய்கிறது. வாசகர்களான சபைப் போதகர்கள், ஊழியக்காரர்கள், சபை அங்கத்தவர்கள் இதன் முலம் சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்களெனில் அதையே நாம் ஏறெடுக்கும் ஜெபங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாகக் கருதுவோம். இப்புத்தாண்டில் வாசகர்கள் தேவ கிருபையிலும், அறிவிலும் மேலும் பல்லோங்கி வளர எல்லாம் வல்ல இறைமகன் இயேசு கிருபை புரிவாராக. - ஆசிரியர்

திருமறைத்தீபம்

BIBLE LAMP

ISSN 1173-7255

ஜனவரி - மார்ச் 1997

இதழ் 1

ஆசிரியர்: ஆர். பாலா

Phone & Fax: + 64 9 527 1522

E-mail: bala@ihug.co.nz

வெளியிடுவோர்:

சவரின் கிறேஸ் வெளியீடுகள்

Sovereign Grace Publications

த. பெ. எண் 62-159

சில்வியா பார்க்

ஆக்லாந்து

நியூசிலாந்து

ஆசிரியருக்கான கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

Bible Lamp

P. O. Box 62-159

Sylvia Park

Auckland

New Zealand

or

E-mail : bala@ihug.co.nz

காலாண்டுப் பத்திரிகையான திருமறைத்தீபம் ஓர் இலவச வெளியீடு.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப் படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

# கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை

கடந்த இதழில், இன்று பலரால் பிரச்சனைக்குரியதாகக் கருதப்படும் திருச்சபையில் பெண்களின் பங்கு என்ன என்பதைக் குறித்து ஆராய முனைந்தோம். நவீன பெண்ணுரிமைவாதிகளின் வாதங்களைத் தவிடு பொடியாக்கும் விதத்தில் வேத போதனைகள் அமைந்திருப்பதைக் கிறிஸ்தவர்கள் உணர்வார்கள்.

சபையில் பெண்களின் பங்கைக் குறித்துப் பார்த்து வந்த நாம், வேதம் சபையில் பெண்கள் அதிகார பூர்வமாகப் பேசுவதைத் தடை செய்வதைக் கவனித்தோம். 1 கொரி. 14 ஆம் அதிகாரத்தில் 22 தடவைக்கு மேலாகப் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தையான 'பேச்சு', அந்நிய பாஷை பேசுவதையும், தீர்க்க தரிசனம் கூறுவதையும் உள்ளடக்கியதாகும். ஆகவே, சபையில், ஆணும் பெண்ணுமாக போதகர்கள், மூப்பர்களுடன் சபை கூடிவரும் இடங்களில் பெண்கள் போதிப்பதோ, ஜெபிப்பதோ, கூட்டங்களை வழிநடத்துவதோ கர்த்தருக்குப் பிடித்தமான செயலல்ல.

இதனால் பெண்கள் எங்குமே பேசக்கூடாது என்று பொருளல்ல. ஏனெனில் 1 கொரி. 11:5 ஆம் வசனத்தில் பெண்கள் பேசுவதற்கும், ஜெபிப்பதற்கும் அனுமதியளிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இதை அவர்கள் ஆணும் பெண்ணுமாக சபை கூடிவரும்போது செய்ய அனுமதியில்லை. 1 தீமோத்தேயு 2:8, ஆண்கள் மட்டுமே சபை கூடிவரும் போது (சபையிலும், சபை ஜெபக்கூட்டங்களிலும்) ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறது. இவ் வேதப்பகுதி சபைகூடிவரும்போது நிகழ வேண்டியவற்றைப் பற்றிப் போதிக்கிறது. அப்படியானால் பெண்கள் எங்கு பேசலாம்? பெண்கள் ஞாயிறு பாடசாலைகளில் சிறுவர்களுக்குப் போதிக்கலாம். முதிய பெண்கள் இளம் பெண்களுக்குப் போதிக்கலாம். இதை வாசிக்கும் கிறிஸ்தவ சகோதரிகள் தங்களுக்குக் கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ள இம்முக்கிய பணியைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளம் பெண்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பது மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவையான புத்திமதிகளையும் வழங்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில், முக்கியமாக தமிழ்க் கலாச்சார அமைப்பின்படி சில காரியங்களில் பெண்களே பெண்களுக்குத் துணையாக இருப்பது வசதியானது. ஆகவே, சபைகளில் ஆவிக்குரிய வாழ்க்கையில் முதிர்ச்சியடைந்த, வேத அறிவு பெற்ற, மற்றவர்களுக்கு உதாரணமாக இருந்து வாழ்க்கை நடத்தும் முதிய பெண்கள், இளம் பெண்களுக்கு உதவியாயிருப்பது அவசியம். சபைப் போதகர்கள் அறிவுமிக்க முதிய பெண்களுக்கு இக்காரியத்தில் ஊக்கம் தருதல் அவசியம். இதற்காக அப்பெண்கள் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அத்தோடு போதகர்களுக்கும், சபைக்கும் கட்டுப்பட்டே இவற்றை அவர்கள் செய்தலும் அவசியம்.

இதைத்தவிர, சபை கூடிவராத ஏனைய இடங்களில் கிறிஸ்தவர்

களுடன் இருக்குமிடங்களில் அங்கு ஆண்கள் இருந்தால் அவர்களுக்கு மதிப்பளித்து வரம்பு மீறாமல் பெண்கள் பேசலாம். இதற்கு உதாரண மாக அக்குயிலாவும், பிரிசில்லாவும் பர்னபாவைத் தங்கள் வீட்டிலிருத்தி வேதத்தை எடுத்துரைத்ததைப் பார்க்கி றோம். இங்கே கணவன் மனைவி இருவருமாக சேர்ந்து இக்காரியத்தில் ஈடுபட்டனர். இது சபைக்கு வெளியில் நடந்தது. இது சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய ஒரு கூட்டமு மல்ல. இதேவிதமாகத்தான் பல பெண்கள் பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்திற்குத் துணையிருந்திருக் கிறார்களே தவிர, அதிகாரபூர்வமாக ஊழியங்களுக்கு நியமிக்கப்பட்டு அக்காரியங்களில் ஈடுபடவில்லை.

### போதகர்கள், உதவியாளர்கள்

திருமறையை உதறிவிட்டு உலக வழக்கம் என்ற ஒரே நோக்கில் இன்று பெண்களைப் போதகர்களாகவும், உதவியாளர்களாகவும் சபைகளில் நியமிப்பது வழக்கமாக உள்ளது. இதைப்பல சமயக் குழுக்களும் செய்து வருகின்றன. ஆனால் வேதம் இப் பதவிகள் பெண்களுக்குக் கொடுக் கப்படவில்லை என்று தெளிவாகத் தெரிவிக்கின்றது (1 தீமோ. 3; 2 தீத்து 1:7-9). இவ்வேதப்பகுதிகளில் 'கண் காணி' என்ற வார்த்தை ஆண் பாலில்தான் காணப்படுகின்றதே தவிர பெண்களை வேதம் கருத்தில் கொண்டிருக்கவில்லை. அத்தோடு ஏற்கனவே நாம் பார்த்த வேதப் பகுதிகளும் ஆண்களுக்கு மத்தியில் சபையில் அதிகாரபூர்வமாக வேதத் தைப் போதிக்கும் எந்தப் பதவியையும் பெண்களுக்கு மறுக்கின்றது.

சிலர் பெண்கள் சபையில் உதவியாளர்களாக இருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால் அப்போஸ்தலர் 6 இன்படி சபையில் முதன்முறையாக உதவியாளர்கள் நியமிக்கப்பட்டபோது பெண்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அறிகிறோம். அப்போஸ்தலர்களோ டும், வேறு சமயங்களில் பெண்கள் சபையில் சேவைகள் புரிந்திருந்த போதும் இவை அதிகார பூர்வமான பதவிகள் என்று நிரூபிக்க முடியாது (1 தீமோ. 3:1). பெண் உதவியாளர் களைத்தான் குறிப்பிடுகின்றது என்றும் தீர்மானமாகக் கூறமுடியாது. இது ஆண் உதவியாளர்களின் மனைவி மாரையும் குறிக்கலாம். ஆகவே இவ் வேதப்பகுதி பெண்கள் உதவியாள ராக இருப்பதை நிரூபிக்கும் ஒன்றாகக் கொள்ள முடியாது. ரோமர் 16 ஆம் அதிகாரத்தில் பவுல் அநேக பெண் களுக்கு வாழ்த்துத் தெரிவித்த போதும் இப்பெண்கள் எல்லோரும் சபையில் அதிகாரபூர்வமான பதவி கள் வகுத்ததாகக் கொள்ள முடி யாது. தெளிவற்ற வேதப் பகுதிகளை வைத்து நாம் ஒரு கோட்பாட்டை எப்போதும் உருவாக்க முனையக் கூடாது. சிலர் உதவியாளர் பதவி அதிகாரமற்ற சாதாரண சேவை செய்தலைக் குறிப்பதால் அதைப் பெண்கள் செய்வதில் தவறில்லை என்று வாதிடுகிறார்கள். ஆனால் வேதம் அவ்வாறு கருதவில்லை. மூப்பர், உதவியாளர் பதவிகள் மட்டுமே இன்று கர்த்தருடைய சபையில் நிரந்தரமாக சபை அமைப்பில் இருக்க வேண்டிய பதவிகளாக திருமறை போதிப்பதால் அப்பதவிகளை ஆண்கள் மட்டுமே வகிக்க வேண்டும் என்பது திருமறை யின் போதனை.

**கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச் சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப் படுத்துவ தாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அது பற்றித் திருமறை தரும் போதனைகளுக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் கேலிக் கூத்துகள் நடத்துபவர் களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இத்தொடர்கட்டுரை அலசுகிறது.**

**- ஆசிரியர் -**

### பெண்களும் 'மிஷனரி' ஊழியமும்

பெண்கள் மிஷனரி ஊழியத்தில் ஈடுபடலாமா? என்று சிலர் கேட்கலாம். 'மிசனரி' என்ற வார்த்தை இலத்தீன் மொழியின் இருந்து வந்ததாகும். இதன் கிரேக்க மூலம் அப்போஸ்தலர் என்பதாகும். அப்போஸ்தலர் என்றால் அதிகாரபூர்வமாக அனுப்பப்பட்டவர் என்று பொருள். அதாவது அப்போஸ் தலன் என்பவன் தேவ செய்தியை எடுத்துக்கூறி சபை நிறுவும் பொருட்டு அதிகார பூர்வமாக அனுப்பப்பட்ட வன். இவ்வூழியம் ஆண்கள் மட்டுமே செய்ய வேண்டியது. ஆனால் அவர் களோடு சேவை செய்ய பெண்கள் அனுப்பப்படலாம். ஆதியில் மிஷனரி கள் கூட்டத்தில் இவ்விதமாக பெண் கள் நேரடியாக சபை நிறுவ அனுப்பப் படாமல் அவர்களுக்கு உதவி புரிவதற் காக சென்றுள்ளார்கள். ஆகவே, ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தாமல், சபைக்கட்டுப்பாட்டிற்கு உற்பட்டு போதகர், மூப்பர், உதவியாளர் பணி தவிர்ந்த வேறு பணிகளில் பெண்கள் ஈடுபடுவதைத் திருமறை தடை செய்யவில்லை.

கர்த்தர் இவ்வுலகில் தொடர்ந்து கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை இன்று சந்திக்கும் அதி முக்கிய அம்சங்கள் பற்றியும், அவற்றை வேதபூர்வமாக அணுகும் வழிமுறைகள் பற்றியும் இக்கட்டுரை மூலம் பார்த் தோம். கர்த்தருடைய சபையின் அங்கத்தவராக உள்ள ஒவ்வொரு தேவ மனிதனும் இவற்றைத் தனக்குத் தொடர்பில்லாத தொன்றாகக் கருதாமல் கருத்தோடு ஆராய்ந்து, வேதபூர்வமான சபைகள் அமைவதில் தனது பங்கை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளான். போதகர்கள், மூப்பர்கள், உதவியாளர்களும் திரு மறையின் போதனையின்படி திருச் சபை அமையும்படிப் பார்த்துக் கொள் வதில் பெரும் பொறுப்புள்ளவர்களாக உள்ளனர். சபையை உதாசீனம் செய்து தாம் நினைத்தபடி வாழ்ந்து கொண் டிருப்பவர்கள், இராஜாதி இராஜனாம் இயேசு சபையின் இராஜன் என்பதை உணர்ந்து, அவர் வழிப்படி வாழ நடவடிக்கை எடுப்பது அவசியம். எல்லா எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் சபையை மகிமையுடன் கொண்டு செல்ல வரப்போகும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை.

# வில்லியம் கேரி



**'கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்' என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

## நவீன மிஷனரி ஊழியத்தின் ஆரம்பம்

தொமஸ் புளரின் வீட்டில் 1792 இல் நவீன மிஷனரி ஊழியத்திற்கு அடித்தலமிடப்பட்டது. ஹைபர்-கல்வினிஸத்தின்[1] வாதங்களைத் தவிடு பொடியாக்கினார் புளர். ஒக்டோபர் 2 ஆம் திகதிக் கூட்டத் திற்கான எல்லா ஏற்பாடுகளையும் பொறுப்பெடுத்துக் கவனித்துக் கொண்டார் புளர். அவருடைய உதவியாளர்கள் இதில் அவருக்குப் பெருந்துணையாக இருந்தனர்.

கூட்டத்தின் காலை நேர ஆரம்பப் பிரசங்கத்தை ரைலன்ட் ஆரம்பித்து வைத்தார். ஏசாயா 43:13 அவரது பிரசங்கத்தலைப்பாக இருந்தது. பியர்ஸ் பகல் வேளைப் பிரசங்கத்தின் மூலம் கேட்போரின் உள்ளத்தில் அன்பைக் கொளுந்துவிட்டு எரியச் செய்தார். மாலை நேரம் பாப்டிஸ்து ஐக்கியத்தின் செயல் திட்டங்களைப் பற்றி விவாதிக்க ஒதுக்கப்பட்டது. இதில் பன்னிரண்டு போதகர்கள் கலந்து கொண்டனர். நொட்டிங்கம் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மிஷனரி ஊழியத்திற்கான 'திட்டத்தை' ப்பற்றி இதில் ஆராய முடிவு செய்யப்பட்டது. இருந்தபோதும் வந்திருந்த அநேகருக்கு இது நடக்கக்கூடிய காரியமாகத் தென்படவில்லை. இதைப்பற்றி விவாதிக்கவோ, மிஷனரி ஊழியத்திற்கு தம்மை ஒப்புக் கொடுக்கவோ பலர் தயாராக இருக்கவில்லை. அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் வெகு சிலரே கேரியின் இறவாப் பிரசங்கத்தை நொட்டிங்காமில் கேட்டிருந்தனர். அன்றைய தினம் அவர்கள் உதவியற்றவர்களாகத் தென்பட்டனர். சிறிய சபைகளையும், கல்வியறிவற்ற சாதாரண குடிமக்களையும் சபைகளில் கொண்டிருந்த இப்போதகர்கள் இப்பெரும்பணியைப் பொறுப்பெடுத்து எவ்வாறு நடத்துவது என்று கலங்கினர். இதில் எவ்வித அனுபவத்தையோ, வழிநடத்தக் கூடியவர்களையோ அவர்கள் கொண்டிருக்கவில்லை. இறுதியாக இது தம்மால் செய்யக் கூடிய காரியமல்ல, நகர்ப்புறங்களில் உள்ள பெரும் சபைகள் பொறுப்பேற்க வேண்டிய ஊழியம் என்ற முடிவுக்கு வந்தனர்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் வெறும் கிராமப்புறத்தைச் சேர்ந்த அவர்கள் நகர்ப்புற வாழ்க்கையை அறியாதவர்கள். இங்கிலாந்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவில்லை. இத்தனை சாதாரண மனிதர்களான நாம் எப்படி மிஷனரி ஊழியத்தில் ஈடுபடுவது? என்ற தயக்கம் அவர்களை வாட்டியது.

சான்றோர் சரிதம்

ஆனால், மொரேவியன் மிஷனரி ஊழியத்தை ஆர்வத்தோடு படித்து வந்திருந்த கேரி அவர்களுடைய ஊழியங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். 'மொரேவியர்கள், அதிலும் அவர்களில் எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு தூரம் மிஷனரி ஊழியத்தில் பெரும் வெற்றிகளை சந்தித்துள்ள போது, பாப்திஸ்துகளான நாம் சிறிதளவாவது கர்த்தருக்கு செய்ய முடியாதா?' என்று வாதிட்டார். கேரியின் வற்புறுத்தலி னால் பயம் சிறிதகன்ற போதகர்கள் அவருக்கு வளைந்து கொடுத்தனர். மிஷனரி ஊழியத்தின் பொறுப்புகளை எண்ணிக் கலங்கினாலும், அதைத் தொடர அவர்கள் அன்று முடிவெடுத்தனர். கடுகைப் போன்ற விசுவாசத்தை அவர்கள் கொண்டிருந்தபோதும் அது கர்த்தருக்குப் பிரியமானதாகவிருந்தது.

சிறு தொகையினரான போதகர்களின் ஆதரவோடு, கேரி, புளர், பியர்ஸ், ரைலன்ட், சட்கிளிப் ஆகிய ஐவராலும் ஏற்படுத்தப்பட்ட மிஷனரி நிறுவனம் நவீன பிரித்தானிய வரலாற்றிலேயே புதுமை வாய்ந்தது. தூய்மைவாதிகள் மக்கள் சபை இவ்வூழியத்திற்கு வழிகோள வேண்டும் என்று எதிர்பார்த்தனர். குரொம்வெல் இதற்கான ஒரு அமைப்பை ஏற்படுத்தினார். ஆனால் இந்த ஐவரோ ஏழு சாதாரண கிராமப்புற போதகர்களின் ஆதரவை மட்டுமே கொண்டிருந்தனர். பிரித்தானியாவின் அன்றைய சபைகள் இப்புதுமை ஊழியத்தைப் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை. ஏனைய ஐந்து பாப்திஸ்து ஐக்கியங்களும்கூட இதைப்பற்றி எதையும் அறிந்திருக்கவில்லை. 'கர்த்தரை அறியாதவர்களின் மத்தியில் நற்செய்தியைப் பரப்புதல்' என்று அவர்களுடைய நோக்கத்திற்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டது.

ஆரம்ப அங்கத்துவக் கட்டனமாக பதின்மூன்று பவுண்டு இரண்டு சிலிங் சேர்க்கப்பட்டது. எல்லோராலும் கட்டனத்தை உடனடியாகக் கொடுக்கமுடியவில்லை. இதில் கேரியின் 'விசாரணை'யின் விற்பனையின் மூலம் கிடைத்த பணமும் அடங்கும். இத்தொகை நமக்கு சாதாரணமானதாகத் தென்பட்டாலும், அன்றைய நிலையில் வறுமையின் பிடியில் நின்ற போதகர்களின் நிலைமையைப் பொறுத்தவரையில் ஒரு பெருந்தொகையே. அவர்களில் மூவர் தாம் தீர்மானித்த தொகையைக் கொடுக்க மூன்று மாத காலம் எடுத்தனர். மிகவும் வறுமமையுள்ள ஒருவருக்கு இத்தொகையைக் கொடுக்க ஒரு வருட காலம் கொடுக்கப்பட்டது.

பலராலும் சிரித்தொதுக்கப்பட்ட இப்பெரு முயற்சி வரலாற்றின் பக்கங்களில் பொறிக்கப்பட்டது. கவனிப்பாரற்ற ஒரு ஒதுக்குப்புற நகரில், முழு உலகமும் அறிந்திராத அற்புத ஊழியத்திற்கு அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

(வளரும்)

# கிருபையின் போதனைகள்

கிருபையின் போதனைகளுக்கும், சீர்திருத்தக் கோட்பாடுகளுக்கும் இடையில் உள்ள தொடர்பையும், வேறுபாட்டையும் நாம் ஜூலை-செப். '96 இதழில் ஆராய்ந்தோம். சீர்திருத்தக் கோட்பாட்டை ஒருவர் பின்பற்றுவதற்கான ஆரம்பநிலையே கிருபையின் போதனைகளில் அவருக்கு ஏற்படும் ஆர்வமும், அறிவுமாகும். ஏனெனில் கிருபையின் போதனைகள் கர்த்தரின் இறைமையின் மகிமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. கர்த்தர் தனது இறைமைத்துவத்தின் அடிப்படையில் கிருபையினால் எவ்வாறு தன் சித்தப்படி தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்கு இரட்சிப்பை அளிக்கிறார் என்று கிருபையின் போதனைகள் விளக்குகின்றன. இது சீர்திருத்தக் கோட்பாட்டின் இரட்சிப்பைக் குறித்த போதனையாகும்.

இனி நாம் இக்கிருபையின் போதனைகளைத் தெளிவாக ஆராயலாம். அவ்வாறு ஆராய்கிறபோது எங்கு ஆரம்பிப்பது என்பது மிகவும் முக்கியம். உங்களில் சிலர் ஏற்கனவே ஐங்கோட்பாடுகளைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அதைப்பற்றி ஏற்கனவே சுருக்கமாக இப்பகுதிகளில் விளக்கியுள்ளோம். சீர்திருத்தவாதத்தின் இரட்சிப்பின் போதனைகளை எடுத்து விளக்குவதே இவ்வைங் கோட்பாடு. ஆனால் சிலர் இவ்வைங் கோட்பாட்டைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். எதையும் அறிந்து கொள்ள முற்படும்போது பொறுமையுடன் அவற்றை சரிவர ஆராய்ந்து விளங்கிக் கொள்ள முயல்வது அவசியம். அதைச் செய்வதில் பொறுமையற்றவர்களில் சிலர் இன்று அவற்றில் நான்கு கோட்பாடுகளை மட்டும் ஏற்றுக்கொள்கிறோம் என்றும் வேறு சிலர், இரண்டரைக் கோட்பாடுகளை மட்டும் பின்பற்றுபவர்களென்றும் மார் தட்டுகிறார்கள். இதிலிருந்து இவர்கள் இவ்வைங்கோட்பாடுகளைச் சரிவரப்புரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவு.

ஆகவே இவ்வைங் கோட்பாடுகளை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால் கடவுளின் செயலைப் பற்றிய சீர்திருத்தக் கோட்பாட்டின் முக்கிய போதனைகளை நாம் விளங்கிக் கொள்ளல் அவசியம். சீர்திருத்தக் கிறிஸ்தவத்திற்கும் ஏனைய போதனைகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் கவனித்துப் பார்த்தால் சீர்திருத்தக் கிறிஸ்தவம் விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்ததாகவும் ஏனையவை கிரியைகளின் அடிப்படையில் அமைந்ததாகவும் காணப்படுவதை மறுக்க முடியாது. சீர்திருத்தக் கிறிஸ்தவம் மட்டுமே பூரணமாக கர்த்தரின் கிருபையின் அடிப்படையிலான விசுவாசத்தை வலியுறுத்துவதாக உள்ளது. ஆகவே சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் மூலமே கிறிஸ்தவம் முழுமையாக வெளிப்படுத்தப்படுகின்றது என்று கூறுவது மிகையாகாது. இவ்வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முதலில் நாம் கடவுளைப்பற்றிய சீர்திருத்தப் போதனையின் முக்கிய அம்சங்களைப் பார்க்க வேண்டியது அவசியம். அவற்றைப் படிமுறையாக முதலில் இங்கே தந்து பின்பு அவற்றை விளக்க முனைவோம்.

> **சீர்திருத்தக் கிறிஸ்தவம் மட்டுமே பூரணமாக, கர்த்தரின் கிருபையின் அடிப்படையிலான விசுவாசத்தை வலியுறுத்துவதாக உள்ளது.**

1. கடவுளின் இறைமை அல்லது சர்வ ஏகாதிபத்தியம்.

2. பாவத்தினால் முழுமுற்றாகப் பாதிக்கப்பட்ட மனிதனின் உபயோகமற்ற நிலை.

3. கிறிஸ்துவின் பரிகாரப் பலி.

4. கடவுளின் முன்னறிவு.

### 1. கடவுளின் இறைமை அல்லது சர்வ ஏகாதிபத்தியம்

சீர்திருத்தக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமே கடவுளின் இறைமைதான். அதாவது கடவுளை பூரணமானவராகவும், முழுச்சுதந்திரத்துடன் தான் நினைத்தபடி இயங்கும் கர்த்தராகவும் சீர்திருத்தக் கோட்பாடு போதிக்கிறது. சகல சுதந்திரத்துடன் அனைத்தையும் திட்டமிட்டு, தனது நன்மைக்காகவும், மகிமைக்காகவும் செயல்படுத்துபவர் கடவுள் என்பது அதன் போதனை. அவரது ஆணைகள் நித்தியமானவை; என்றும் மாறாதவை; அவரது பரிசுத்தத்தையும், ஞானத்தையும், இறைமையையும் பிரதுபலிப்பவை. திருமறையின்படி, அவரது ஆணைகளே எதிர்காலத்தைப் பற்றிய தேவஞானத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. அவரது ஆணைகளை சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒரு போதும் பாதித்து விட முடியாது.

கடவுள் அனைத்தையும் சிருஷ்டித்திருப்பதால் அவரே அவற்றின் சொந்தக்காரராகவும், அவற்றைத் தான் நினைத்தவிதத்தில் பயன்படுத்தும் உரிமையையும் கொண்டிருக்கிறார். அவர் மனிதர் வாழ்வில் பொதுவான ஆளுமையைக் கொண்டிராமல், அவர்களது வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களையும் நடைமுறையில் ஆள்பவராக உள்ளார் (அப். 4:24-28). அவரது வல்லமையையும், மகிமையையும் பார்க்கும் போது உலக நாடுகளனைத்தும் அவர்முன் வெறும் துரும்பே. (ஏசாயா 40:12-17). எமது மனித வாழ்க்கையில் ஏற்படும் அத்தனைக் குழப்பங்கள், மாறான நடவடிக்கைகளின் மத்தியில்

அவர் எல்லாவற்றையும் திட்டப்படி அமைதியோடு கொண்டு நடத்து பவராக உள்ளார். பாவிகளான மனிதர்களின் பாவகரமான செயல்கள்கூட அவரது அனுமதியுடன், அவர் மனிதர்களுக்கு அளிக்கும் வல்லமையுடனே நடக்க முடியும். அவரது சித்தப்படியே மனிதர்களின் பாவகரமான செயல்களும் நடப்பதால், ஒருவிதத்தில் அவையும் அவரது நித்திய திட்டத்தில் பங்கு வகிக்க வேண்டும். இவற்றிற்கு அவர் அனுமதியளிப்பதால் அவருக்கும் பாவத்திற்கும் சம்பந்தமிருப்பதாக நாம் முடிவு கட்டிவிட முடியாது. அத்தோடு இவற்றை மனிதர்கள் செய்வதையும் அவர் வெறுக்கிறார். ஆனால் உலகிலும் மனித வாழ்க்கையிலும் நிகழும் எக்காரியங்களும் அவரது அனுமதியின்றி நடக்க முடியாது. ஏனெனில் அவர் இறைமையுள்ள தேவன். இப்போதனை எனக்குப் பிடிக்கவில்லை, அல்லது இதைப்புரிந்து கொள்ள எனக்கு சரியான ஞானம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக இதனை எவரும் நிராகரித்துவிட முடியாது. திருமறை தெளிவாக போதிக்கும் இவ்வுண்மையை நாம் விசுவாசத்தின் மூலம் மட்டுமே நம்பமுடியும்.

சர்வ வல்லமையுள்ள, இறைமையுள்ள கர்த்தரால் பாவியான மனிதனை தன்னிடத்தில் அழைத்துக் கொள்ள முடியாதா? எல்லாவற்றையும் படைத்து, அவற்றை ஆண்டுவரும் தேவனால் மனிதனின் குணங்களை மாற்றி அமைக்க முடியாதா? கானாவில் தண்ணீரைத் திராட்சை இரசமாகவும், தமாஸ்கு வீதியில் யூதனான சவுலை கிறிஸ்தவனாகவும் அவர் மாற்றியிருக்கிறார். ஒரு குஷ்டரோகி அவரைப்பார்த்து, ஆண்டவரே, நீர் சித்தங் கொண்டால் என்னைச் சுத்தமாக்க உம்மால் முடியும் என்று கூறியதை நாம் மறந்துவிட முடியாது. அவரது வார்த்தையின் வல்லமையினால் அன்று அவனது வியாதி தீர்ந்தது. சிலர் போதிப்பதுபோல், கடவுளால் மனித சித்தத்தைக் மாற்றமுடியாது என்றோ அல்லது மனிதனை மாற்றி அவனுக்கு இரட்சிப்பை அவரால் அளிக்க முடியாதென்றோ நாம் எண்ணக்கூடாது. உலகத்தில் உள்ள அனைவரையும் தன்னிடத்தில் அழைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தீர்மானித்தாரானால், இப்போதே கண்ணிமைக்கும் நேரத்தில் அவரால் அதைச் செய்துவிட முடியும்.

இறைமையுள்ள தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்பாகத் தாம் எடுத்த திட்டங்களின்படிச் செயல்படுபவராக இருக்கிறார். அத்திட்டங்களை எவரும் மாற்றிவிட முடியாது. அத்தொடு அத்திட்டங்களை அவரும் மாற்றிக் கொள்ளப்போவதில்லை. தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் நன்மைக்காகவும், தனது மகிமைக்காகவும் அவர் எற்படுத்தியுள்ள திட்டங்களை அனுதினமும் அவர் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார். இவையெல்லாம் நமக்கு திருமறையின் போதனையான இறைவனின் சர்வ ஏகாதிபத்தியத்தைக் குறித்து நினைவுபடுத்துகின்றன.

கடவுளுடைய திட்டங்களை மாற்றி மனிதன் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். அவரது திட்டங்களுக்கு மாறாக அவரால் தெரிந்து கொள்ளப்படாத எவரும் இரட்சிப்பை அடைந்து விடலாம் என்று போதிக்கும் எவரும் கடவுளின் சர்வ ஏகாதியத்தியத்தைப் பற்றியும் அவரது வல்லமையைப் பற்றியும் புரிந்து கொள்ளாதிருக்கிறார்கள். கடவுளால் படைக்கப்பட்டவன் படைத்தவரை மீறி ஒன்றும் செய்துவிட முடியாது. அதேவேளை பரிசுத்தமான தேவன் எப்போதும் நீதியுள்ளவராகவிருப்பதால் அவருக்கும் அநீதிக்கும் எத்தொடர்புமில்லை. அவரது சர்வ வல்லமை அவரது செயல்களுக்கெல்லாம் அடிப்படையாக இருந்து இவ்வுலகில் அவரது ஆணைகளை, அவரின் சித்தத்தின்படி நிறைவேற்றி வருகிறது.

(வளரும்)

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாசிப்பவர்கள். கர்த்தர் அனைத்தையும் கிறிஸ்துவின் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளார் என்று வேதம் போதிக்கின்றது (எபேசியர் 1:22). ஆகவே நற்செய்தியை எடுத்துரைத்து இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்களை ஒருங்கிணைப்பது திருச்சபையின் பொறுப்பாக இருக்கின்றது.

இன்று அநேகர் நிறுவனங்களின் துணையில்லாமல் திருச்சபைகள் சபைகளை எழுப்பவோ, மிஷனரி ஊழியத்தில் ஈடுபடவோ முடியாது என்று எண்ணுகின்றனர். சில நிறுவனங்கள் உலகில் பொறுப்போடு திருச்சபைகளுக்கு மதிப்பளித்து நூல்வெளியீடு போன்ற சில நல்ல ஊழியங்களைச் செய்து வந்தபோதும், திருச்சபைகள் நிறுவனங்களின் துணையின்றி மிஷனரி ஊழியத்திலோ, சபை நிறுவுவதிலோ ஈடுபட முடியாது என்று எண்ணுவது வேதத்திற்குப் புறம்பான கருத்து. திருச்சபைகள் இவ்வூழியங்களில் முழுமூச்சோடு ஈடுபட வேண்டுமென்பதே கர்த்தரின் எதிர்பார்ப்பு. இவ்வூழியங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அனைத்தையும் கிறிஸ்து சபைகளுக்குத் தந்துள்ளதாக வேதம் போதிக்கின்றது (எபேசியர் 4:11). இத்தகைய ஊழியங்களில் நிறுவனங்கள் ஈடுபடவேண்டுமா? அல்லது சபைகள் ஈடுபடவேண்டுமா என்று கேட்பதை நாம் விடுத்து, கிறிஸ்து தனது வார்த்தையில் சபைகள் எதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதைப் படித்து அதன்படி நடப்பதே மெய்க்கிறிஸ்தவனின் கடமை.

சுவிஷேசக் கோட்பாட்டாளன் சபையில் நம்பிக்கை வைத்திருப்பவன். சபைகள் வேதபூர்வமாக வேண்டும், அவை தொடர்ந்து தேவ வார்த்தையின்படி பரிசுத்தமாக வளர வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவன். சபை அங்கத்துவத்திற்கு அவன் முக்கியத்துவம் கொடுத்து அதற்குத் தன்னை ஒப்புக் கொடுப்பவன். தனது வரங்களை சபை மூலமாக சபை வளர்ச்சிக்காகப் பயன்படுத்துபவன். புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் இதில் நம்பிக்கை வைப்பதில்லை. திருச்சபை பற்றிய வேத போதனைகளில் அவனுக்கு நம்பிக்கை இருக்காது. ஊழியம் செய்ய வேண்டும் என்று அவன் அலைவானே தவிர அவ்வூழியம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதில் அவன் எவ்வித அக்கறையும் காட்டமாட்டான். இத்தானியங்கி மனிதன் திருச்சபையை நிராகரித்து தான் நினைத்தபடி இயங்கி வருவான்.

முடிவாக, புதிய சுவிஷேசக் கோட்பாடு சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்திற்கெதிரான ஒரு பெரும் ஆபத்தாக இன்று உருவெடுத்திருக்கின்றது. சுவிஷேசக் கோட்பாட்டாளர் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்கள் இவ்வாபத்தைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியம். நற்செய்தியையும், திருமறையையும் அலட்சியப்படுத்தாது சிந்தித்து செயலாற்ற வேண்டிய நேரமிது. 'கிறிஸ்தவர்களைத் தனது கைப்பாவைகளாக மாற்றிக்கொள்கிறபோதே தந்திரத்தில் வல்ல சாத்தான் சத்தியத்தையும், பரிசுத்தத்தையும், ஐக்கியத்தையும் பயங்கரமாக எதிர்க்கிறான்' என்று தூய்மைவாதிகளில் ஒருவரான ரிச்சர்ட் பெக்ஸ்டர் கூறியதை இவ்வேளையில் நாம் நினைவு கொள்வது பொருந்தும்.

# சுற்றுச் சூழலால் பாதிக்கப்பட்டிருக்கும் சுவிஷேசக் கோட்பாட்டியக்கம்

**. . . சிறப்புக் கட்டுரை . . . சிறப்புக் கட்டுரை . . . சிறப்புக் கட்டுரை. . .**

இன்று உலகம் முழுவதும் கிறிஸ்த சபைகள், நிறுவனங்கள் மத்தியில் குழப்பமான ஒரு சூழ்நிலை காணப்படுவதைப் பார்க்க முடிகின்றது. சுவிஷேசக் கிறிஸ்தவம் (Evangelical Christianity) என்ற பெயரில் பகுத்தறியும் பக்குவத்தை இழந்து, எதையும் அங்கீகரிக்கும் நிலையில், எந்தவொரு இறையியல் வரம்பிற்குள்ளும் உட்படுத்தி அடையாளங்காண முடியாத அமைப்புகளாக சபைகளும் நிறுவனங்களும் அமைய முயலுகின்றன. இதற்கு தமிழகமும், தமிழ் பேசும் மக்கள் வாழும் ஏனைய நாடுகளும் விதிவிலக்கல்ல. (இக் கட்டுரை முழுதும், சுவிஷேசக் கிறிஸ்தவம், சுவிஷேசக் கோட்பாடு, சுவிஷேசக் கோட்பாட்டியக்கம் ஆகிய பதங்கள் அனைத்தும் ஒன்றையே குறிப்பனவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்)

### சுவிஷேசக் கோட்பாடு (Evangelicalism) பற்றிப் பரவலாகக் காணப்படும் கருத்து

சுவிஷேசக் கோட்பாட்டைக் (Evangelicalism) குறித்து நம்மத்தியில் உலவி வரும் நடைமுறைக் கருத்தை முதலில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம். சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்திற்குள் ரோமன் கத்தோலிக்க சபை தவிர்ந்த அனைத்தையும் உள்ளடக்குவது பொதுவாக நிலவி வரும் கருத்து. இது மிகவும் பரந்த, விரிந்த, எதையும் உள்ளடக்கும் கருத்தாகும். இக்கருத்து பொதுவாகவே எல்லோர் மத்தியிலும் காணப்படுகின்றது. மேலும் இக்கருத்தின்படி சுவிஷேசத்தை அறிவிப்பது மட்டுமே முதன்மையான பணியாகக் கருதப்படுவதால், இதன் அடிப்படையில் கத்தோலிக்கரைத் தவிர்ந்த அனைத்து சபைகளும், இயக்கங்களும் சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைச் சேர்ந்தவையாகும். ஜூலை-செப். '96 இதழில், கர்த்தர் கட்டியெழுப்பும் சபை பற்றிய கட்டுரையில் சுவிஷேசக் கோட்பாட்டைக் குறித்து இன்று நம் மத்தியில் பொதுவாகவே உலவி வரும் இக்கருத்தை (IEM - இந்திய இவெஞ்சலிக்கள் மிசன்) நாம் வரைபடத்துடன் காட்டியுள்ளோம்.

> **சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தின் அதிமுக்கிய அடையாளம் சுவிஷேத்தை அறிவிப்பது மட்டுமா? தமிழ் கூறும் நல்லுலகெங்கும் புதிய-சுவிஷேசக் கோட்பாடு (New-Evangelicalism) என்ற பெயரில் இதை மட்டுமே அடையாளமாகக் கொண்டு காணப்படும் கலப்பட இயக்கத்தின் குழப்ப நிலையை ஆராய்வதோடு, உண்மையான சுவிஷேசக் கோட்பாட்டின் அடிப்படைக் கோட்பாடுகளையும் விளக்குகிறது இக்கட்டுரை. நம்மையும், சபைகளையும் பாதித்து வரும் இப்போக்கை அலட்சியப்படுத்துவது நிகழ்கால, வருங்கால கிறிஸ்தவத்தின் அழிவிற்கே வழிகோளும்.**

சுவிஷேசம் அறிவிப்பதையும், சுவிஷேசக் கோட்பாட்டையும் ஒரே பொருளுள்ள இரு வார்த்தைகளாக இக்கருத்து கருதுகின்றது. திருமறையைக் குறித்த வேறுபாடுள்ள பல கருத்துக்களை ஒரு சபையோ நிறுவனமோ கொண்டிருந்தாலும் சுவிஷேசம் அறிவிப்பதில் அது ஊக்கம் காட்டினால் 'சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்திற்குட்பட்டதாக அதை இக்கருத்து ஏற்றுக் கொள்கிறது.

இதில் ஆச்சரியமான ஒரு விடயமென்னவெனில் 'சுவிஷேசக் கோட்பாடு' என்ற பெயரில் நடைமுறையில் காணப்படும் இக்கருத்திற்கும், சுவிஷேசக் கோட்பாட்டிற்கும் உண்மையில் எந்தவிதத் தொடர்புமில்லை. ஒரு சபையோ, நிறுவனமோ சுவிஷேசத்தை அறிவிப்பதில் ஊக்கம் செலுத்துகிறது என்ற ஒரே காரணத்தினால் அதனை சுவிஷேசக் கோட்பாட்டு இயக்கத்திற்குள் சேர்த்துவிட முடியாது. இது சுவிஷேசக் கோட்பாட்டை சரிவரப் புரிந்து கொள்ளாததால் ஏற்படும் தவறாகும்.

### சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்திற்குள் ஏற்பட்டுள்ள மாறுதல்கள்

நாம் இதுவரை விளக்கிய கருத்து ஏற்கனவே மேலை நாடுகளில் பிரதானமாக அமெரிக்காவில் இருந்து பின்பு கீழைத்தேய நாடுகளில் பரவிய தொன்றாகும். இதற்கு புதிய-சுவிஷேசக் கோட்பாடு (New-Evangelicalism) என்று பெயர். 1947 இல் இப்பெயர் உருவாகி அன்று முதல் இதனை பராமரித்து வரும் நிறுவனங்களாக அமெரிக்காவில் 'கிரிஸ்டியானிடி டுடே' ***(1956)*** பத்திரிகையும், 'புளர் தியலோஜிக்கல் செமினரியும்' ***(1947)*** இருந்து வருகின்றன. சுவிஷேசக் கோட்பாடு பற்றி வழமையாக வழங்கி வந்த கருத்தினை நிராகரித்து

அதற்குப் புதிதாகக் கொடுக்கப்பட்ட விளக்கமே இப் பெயர் பெற்றது. இது பார்ப்பதற்கு முறையான ஒரு இயக்க மாகத் தென்பட்டாலும் மிகவும் பலவீனமானதாகும். கொள்கை களுக்கோ, கோட்பாடுகளுக்கோ இது முக்கியத்துவம் கொடுக்காததோடு, கிறிஸ்தவத்தின் பெயரில் எதையும் சுலபமாக, ஆராயாது அங்கீகரிக்கும் ஒரு இயக்கமாகவும் உள்ளது.

மேலை நாடுகளில் **20** ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதி களிலேயே முதன் முதலில் சுவிஷேசக் கோட்பாட்டிற்குப் புது விளக்கம் தரப்பட்டது. இக்காலத்தில் வேதத்தின் அதிகாரம் மறுதலிக்கப்பட்டது. திருமறையைக் குறித்து பாரம்பரிய மாக கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் புது உலக மனிதனின் விஞ்ஞான அறிவுக்கு ஒத்துவராது என்ற சிந்தனைப் போக்கு 'ஹையர் கிரிடிஸிசத்திற்கு' வழிகோளியது. இதன் பாதிப்பால் வேத அடிப் படையில் அதன் வரலாறும், போதனைகளும் விளக்கப்படாமல் விஞ்ஞான, நில அகழ்வு ஆய்வுகளின் முடிவின்படி ஆராயப்பட்டது. இறை யியல் கல்லூரிகளும் இத்தகைய ஆய்வு முறைக்கே முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின. இப்போக்கு பலருக்கு திருமறையின் மீது இது வரை இருந்து வந்த நம்பிக்கைகளைத் தகர்க்கத் தொடங்கியது. படிமுறை வளர்ச்சி உயிரியல் கோட்பாடும் (Evolution) சுவிஷேசக் கோட்பாட்டியக்கத் தினரின் மத்தியில் வலிமை பெறத் தொடங்கியது. படைப்பைக் குறித்த போதனைகள் அடங்கிய ஆதியாகமப் பகுதிகள் உருவகமாகக் கருதப்பட்டன. கடவுள் ஆறு நாட்களில் உலகைப் படைத்தார் என்ற வேதபோதனையை விசுவாசிப்பவர்கள் இறையியல் பழமைவாதிகளாகவும், மாறா மரபேற்புக் கோட்பாட்டாளராகவும் (Fundamentalist[1]) கருதப்பட்டனர். 'இறைசார்ந்த படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு' (Theistic Evolution) வேதபூர்வமானதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. இத்தகைய புது உலக விஞ்ஞான அறிவியலின் அடிப் படையிலான விளக்கங்கள் வேதத் தின் அதிகாரத்தில் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை சிறிது சிறிதாகத் தகர்க்கத் தொடங்கின.

சிக்மன் ப்ரொயிடின் (Sigmond Freud) உளவியற் கோட்பாடுகளும் சுவி ஷேசக் கோட்பாட்டினைப் பாதித்தது. மேலை நாடுகளில் இதனால் பாதிக் கப்படாத சபைகள், இறையியல் கல்லூரிகளைப் பார்ப்பதரிது. இறை யியல் கல்லூரிகளின் போதகத்துறைப் பாடத்திட்டங்களில் இன்று உலகப் பிரகாரமான உளவியற் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. மேலை நாடுகளில் இன்று என்றுமில்லாத வகையில் உளவியற் கோட்பாடுகள் போதகர்களினால் பயன்படுத்தப் பட்டு பல சபைகளில் தனிமனிதரின தும், குடும்பங்களினதும் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெரும் பிரச்சனை களை ஏற்படுத்தி வருகின்றது.

அத்தோடு, இக்காலத்தில் பரவசக் குழுக்களின் தாக்கத்தால் வேதத்திற்கு வெளியில் இருந்தும் கர்த்தரின் வெளிப்பாடு பெறப் படலாம் என்ற எண்ணம் வலிமை பெறத் தொடங்கியது. பரிசுத்த ஆவிக்கு முக்கியத்துவம் கொடுக் கிறோம் என்ற பெயரில் கிறிஸ்துவும், வேதமும் புறக்கணிக்கப்பட்டது.

**இன்று 'சுவிஷேசக் கோட்பாட்டின்' உண்மைத் தத்துவமே மறைந்து பல சாயல் களுடன் இவ்வார்த்தைப் பிரயோகம் பலரும் நினைத்த விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இது புதிய-சுவிஷேசக் கோட்பாடே (New-Evangelicalism) தவிர இதற்கும் சுவிஷேசக் கோட் பாட்டிற்கும் (Evangelicalism) எந்தவிதத் தொடர்பும் இல்லை. தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் இன்றைய இறையியல் குழப்ப நிலைக்கு (Theological Confusion) இப்புதிய சுவிஷேசக் கோட்பாடே காரணம்.**

அற்புத அடையாளங்களே ஒருவர் மெய்க் கிறிஸ்தவரா? என்று தீர்மானிக்கும் எடைகோளாகக் கருதப்பட்டன. தேவ சித்தத்தை அறியும் வழிகளாக கனவுகளும், தீர்க்க தரிசனங்களையும் பலர் நாடிச் செல்லத் தொடங்கினர். இவற்றால் திருமறையின் அதிகாரத்தைப் பற்றிய உணர்வு மேலும் குறையத் தொடங் கியது. இம்மாறுதல்களால் 'சுவிஷேசக் கோட்பாடு' இயக்கத்தைச் சார்ந்த பலர் இக் கருத்துக்களை அங்கீகரிக்கத் தொடங்கினர். அன்று முதல் பரவசக் குழுவும் 'சுவிஷேசக் கோட்பாட்டின்' ஒரு பகுதியாக பரவலாக அங்கீகாரம் பெற்றது.

இத்தகைய மாறுதல்கள் நற் செய்தி ஊழியத்தையும், வழிபாட்டு முறைகளையும் விட்டு வைக்கவில்லை. மனித சிந்தனைக்கும், தனி மனித உணர்வுகளுக்கும் ஆராதனையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பல சுவிஷேசக் கோட்பாட்டு சபைகளில் இன்று ஆராதனை என்ற பெயரில் வெறும் கேலிக்கூத்தே நிகழ்வதைப் பார்க்கலாம். பாட்டுக் கச்சேரியும், கூத்தும் கர்த்தர் தந்துள்ள வல்லமை யுள்ள ஆயுதமான பிரசங்கத்தைத் தூக்கியெறிந்துவிட்டன. ஆராதனை பற்றிய வேதவழிமுறைகளை அறிந் திருப்பவர்களோ, அதற்கு மதிப்புக் கொடுப்பவர்களோ இன்று குறைவு. சபைக்கு வருபவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து எப்படி யாவது சந்தோசப்படுத்திவிட வேண் டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. முழு சரீரமும் கர்த்தரின் சேவையில் ஈடுபட வேண்டும் என்று போதிக்கும் 'விசுவாசிகளின் ஆசாரித் துவம்' என்ற போதனையை எல்லை மீறிப் பயன்படுத்தி, ஆவியால் உந்தப் பட்டவர்களெல்லாம் ஆராதனையில் தாம் நினைத்தபடி பங்கெடுக்கும் வழியை ஆரம்பித்து வைத்ததே 'பிலிமத் பிரதரன்' (Plymouth Brethren) என்ற குழு தான். இதுவே பின்பு கெரிஸ்மெடிக் கூட்டத்தாரால் தான் தோன்றித்தனமாகவும் பயன்படுத்தப் பட்டது.

இதேபோல் நற்செய்தி ஊழியத் திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. நவீன வணிக முறை நுணுக்கங்கள் நற்செய்தி ஊழியத்தில் அறிமுகப் படுத்தப்பட்டன. ஒரு கேபிள் டீ. வி செனலுக்கும் நற்செய்தி ஊழியத்திற் கும் எந்தவித வித்தியாசமும் இல்லாத படி நற்செய்தி ஒரு விற்பனைப் பொருளைப் போல் இன்று விற்கப் படுகின்றது. எந்தவொரு மனிதனை யும் நற்செய்தியை ஏற்றுக் கொள்ள வைப்பது இறுதியில் அதைச் சொல் பவரின் வல்லமையிலும் திறமை யிலுமே தங்கியிருக்கின்றது என்ற நிலைக்கு நற்செய்தி ஊழியம் வந்திருப்பதற்கு சார்ள்ஸ் பினி காரணகர்த்தா என்று வரலாறு எடுத்துக் காட்டுவதை எவரால் மறுக்க முடியும்?

இத்தகைய நற்செய்தி கூறும் முறை இன்று பல்லாயிரக்கணக்கான போலிக் கிறிஸ்தவர்களை உலகெங்கும் ஏற்படுத்தியுள்ளது. கிறிஸ்தவர்கள் என்று நற்செய்தியாளர்களால் கூட்டங்களில் அறிவிக்கப்பட்ட இவர்கள், கிறிஸ்தவ வாழ்க்கையை வாழமுடியாது தடுமாறும்போது, கிறிஸ்துவை அவர்கள் இரட்சகராக மட்டுமே அறிந்துள்ளதால் தான்

இத்தடுமாற்றமெல்லாம் ஆகவே 'ஆண்டவராகவும்' அறிந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கப்படுகிறது. இவ்வாறு 'மாம்சக் கிறிஸ்தவன்' (Carnal Christian) என்ற போதனையும் 'லோர்ட்சிப்' போதனையும் (Lordship Controversy) இன்று அமெரிக்கக் கிறஸ்தவத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய போதனைகள் இறுதியில் 'அன்டி நோமியனிசம்' என்ற போதனைக்கே வழிவகுக்கின்றன என்பதை அநேகர் உணர்வதில்லை. கடவுளின் நீதிக் கட்டளைகளின்படி கிறிஸ்தவன் இன்று வாழ வேண்டியதில்லை என்பது 'அன்டிநோமியனிசத்தின்' போதனை. கடவுளின் அன்பு நாம் அவரது கட்டளைகளைக் கடைப் பிடிக்க வேண்டிய அவசியத்தை இல்லாமலாக்கியுள்ளது என்பது இதன் வாதம். கர்த்தரின் வார்த்தைக்கு முரணான இப்போலிப்போதனை இன்று சுவிஷேசக் கோட்பாட்டுலகைப் பெருமளவில் பாதித்துள்ளது.

பெண்ணுரிமை சார்பான இறையியல் (Feminist Theology) சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைப் பாதித்துள்ள இன்னுமொரு கேடாகும். கிறிஸ்தவப் பெண்களுக்கு விடுதலை தருகிறோம் என்ற பெயரில் நுழைந்துள்ள இப்போதனை திருமறையையே தலைகீழாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவில் புளர் இறையியல் கல்லூரியில் போதித்து வந்த ஜூவட் என்பவர் 1975 இல் வெளியிட்ட 'ஆணும் பெண்ணுமாகிய மனிதன்' என்ற தனது நூலில் பவுல் சபையில் பெண்களின் பங்கைப் பற்றி எழுதும்போது பெரும் தவறிழைத்துள்ளதாக எழுதியுள்ளார். ஆணுக்குப் பெண் அடங்கி நடத்தல் வேண்டும் என்று போதிக்கும் வேதப் பகுதிகளையெல்லாம் அக்காலத்துக் கலாச்சாரத்துக்கு மட்டும் பொருந்தியதாக இவ்விறையியலாலர்கள் போதிக்கிறார்கள். திருமறை கலாச்சாரத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதால் அதன் கலாச்சாரத்திற்கேற்பவே அது விளக்கப்பட வேண்டும் என்பது இவர்களது முக்கிய வேத விளக்க விதியாகும். திருமறையைப் பற்றிய போதனைக்கு திருமறை சரியான வழிகாட்டியல்ல என்றவிதத்தில் இவ்விறையியலாலர்கள் நடந்து வருகிறார்கள். இந்நவீன பெண்ணுரிமை சார்பான இறையியல் போதனை சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தை இன்று பெருமளவில் பாதித்துள்ளது.

இப்பாதிப்புகளையெல்லாம் தூக்கியெறியக்கூடிய விதத்தில் ரோமன் கத்தோலிக்க சபையுடன் உறவாடி ஒன்று சேர வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சிலர். சமய சமரசக்கோட்பாட்டிற்கும் (Ecumanism), சுவிசேஷக் கோட்பாட்டிற்கும் இடையில் உள்ள அடிப்படை வித்தியாசங்களைத் துடைத்தெறிய முயற்சி செய்கிறார்கள் இப்புல்லுருவிகள்.

## புதிய-சுவிஷேசக் கோட்பாடு (New-Evangelicalism)

சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைப் பாதித்து வரும் இம்மாற்றங்களையெல்லாம் நாம் ஏன் ஆராய வேண்டும்? நான் இக்கட்டுரை ஆரம்பத்தில் கூறியபடி, சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைப் பற்றி ஏன் ஒரு பரந்த, அகலமான, எல்லாவற்றையும் உள்ளடக்கும் ஒரு விளக்கம் காணப்படுகின்றது என்பதை இப்போதாவது நீங்கள் புரிந்து கொண்டால் சரி. நாம் விபரித்து வந்துள்ள இப்புதிய போலிப் போதனைகளே சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைச் செல்லரித்து வருவதால் அதன் உண்மையான கோட்பாடுகளை இன்று பலரும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது. ஆகவே இத்தகைய சுற்றுச் சூழலால் பாதிக்கப்பட்டிருக்கும் சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைப் பற்றி கையடக்கமாக, சுருக்கமாக ஒரே வசனத்தில் விளக்களிப்பது எவ்வளவு கடினமானது என்பதைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

**சுவிஷேசக் கோட்பாடு என்ற வார்த்தைப் பிரயோகம் தோன்றிய ஆரம்ப காலத்தில் அது வரலாற்று பூர்வமான, வேத அடிப்படையில் அமைந்த கிறிஸ்தவத்தை மட்டுமே குறிப்பதாக இருந்தது.**

சுவிஷேசக் கோட்பாட்டியக்கம் என்றால் உண்மையில் என்ன? அதன் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? என்று நாம் ஆராயுமுன் அவ்வியக்கத்தைப் பாதித்துள்ள இப்போலிப் போதனைகளுக்குப் பெயர் புதிய-சுவிஷேசக் கோட்பாடு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதைப் பின்பற்றுபவர்கள் சுவிஷேசக் கோட்பாட்டியக்கப் போதனைகளை நிராகரித்துவிட்டனர். நவீன உலகிற்கு ஏற்றவிதத்தில் சுவிஷேசக் கோட்பாட்டியக்கப் போதனைகளை மாற்றும் முயற்சியில் சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்திற்கு இவர்கள் பெருந்தீங்கிழைத்துள்ளனர்.

இப்புதிய-சுவிஷேசக் கோட்பாட்டின் படிமுறை வளர்ச்சியும், பாதிப்புமே இன்று வேதத்தின் அடிப்படைப் போதனைகளான நித்திய தண்டனையை (Eternal Punishment) மறுதலிப்பவர்களையும் (உதா: ஜோன் ஸ்டொட்), ரோமன் கத்தோலிக்க மதம் காட்டும் இரட்சிப்புக்கான வழிமுறைகளை வேத பூர்வமானதாக ஏற்றுக் கொள்ளுபவர்களையும் (உதா: பெட் ரொபட்சன், சார்ள்ஸ் கொல்சன், ஒஸ் கின்னிஸ், பில் பிரைட்,, ஜிம் பெக்கர்), 'லிபரல்', சமய சமரசப் போக்குடையவர்களையும், சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதும் எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் 'சுவிஷேசக் கோட்பாட்டின்' உண்மைத் தத்துவமே மறைந்து பல சாயல்களுடன் இவ் வார்த்தைப் பிரயோகம் இன்று பலரும் நினைத்த விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இது புதிய-சுவிஷேசக் கோட்பாடே (New-Evangelicalism) தவிர இதற்கும் சுவிஷேசக் கோட்பாட்டிற்கும் (Evangelicalism) எந்தவிதத் தொடர்பும் இல்லை. தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் இன்றைய இறையியல் குழப்ப நிலைக்கு (Theological Confusion) இப்புதிய சுவிஷேசக் கோட்பாடே காரணம்.

இப்புதிய-சுவிஷேச இயக்கத்தின் சுயரூபத்தையும், கிறிஸ்தவ உலகில் இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பையும் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் முதலில் சுவிஷேசக் கோட்பாடு என்றால் என்ன? என்றும் அதன் அடிப்படைப் போதனைகள் யாவை என்றும் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

## சுவிஷேசக் கோட்பாடு என்றால் என்ன?

சுவிஷேசக் கோட்பாடு என்ற வார்த்தைப் பிரயோகம் தோன்றிய ஆரம்ப காலத்தில் அது வரலாற்று பூர்வமான, வேத அடிப்படையில் அமைந்த கிறிஸ்தவத்தை மட்டுமே குறிப்பதாக இருந்தது. வேதத்தின் அதிகாரத்தை மட்டுமே வலியுறுத்துவதாகவும் இருந்தது. வரலாற்று அடிப்படையில் பார்க்கும்போது

ஜோன் விக்கிளிப், ஹஸ், செவன ரோலா, மார்டின் லூதர் போன்றோர் சுவிஷேசக் கோட்பாட்டாளர்களாகக் கருதப்பட்டனர். மார்டின் லொயிட் ஜோன்ஸ் 'சுவிஷேசக் கோட்பாடு என்றால் என்ன?' என்ற தனது நூலில் வலியுறுத்துவது போல் இது சீர்திருத்த வாதத்தினதும் (Reformed), தூய்மை வாதத்தினதும் (Puritanism) மறு பெயராகவே இருந்தது. வேத வல்லுன ரான பென்ஜமின் வோர்பீல்ட்டும் சுவிஷேசக் கோட்பாடும், சீர்திருத்த வாதமும் ஒன்றே என்று கூறியுள்ளார். இதற்குக் காரணம் என்னவெனில் இவர்கள் அனைவரும் சுவிஷேசக் கோட்பாட்டையே விசுவாசித் துள்ளனர். இவர்களே இக்கோட்பாடு களுக்கு உருவம் கொடுத்தவர்களாவர்.

அப்படியானால் இவர்கள் விசுவாசித்த கோட்பாடுகள் யாவை? பொதுவாக இவர்கள் திருமறை, தவறற்றதும், நம்பத்தக்கதும், அதிகார முள்ளதும், போதுமானதுமானது என்பதில் உறுதி பூண்டிருந்தனர். அத்தோடு, கடவுளின் தெரிந்து கொள்ளல், அநாதி ஆணை, மனிதனின் பாவம், பாவிகளின் இரட்சிப்புக்கு அத்தியாவசியமான கிறிஸ்துவின் சிலுவைப் பரிகாரப்பலி, எல்லா மனிதர்களுக்கும், எவ்வித வேறுபாடுமின்றி நற்செய்தி பிரசங்கிக் கப்பட வேண்டியதன் அவசியம், இரட்சிக்கப்பட்டோர் சபையாகக் கூடிவர வேண்டியதன் அவசியம், உலகத்தை நியாயந்தீர்த்து, நித்திய அழிவிற்காகக் குறிக்கப்பட்டவர் களைத் தண்டித்து, தனது மக்களுக்கு வெகுமதியளிக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகிய சத்தியங் களையும் உறுதியுடன் பின்பற்றினார் கள். வரலாற்றில் எழுந்துள்ள அனைத்து விசுவாச அறிக்கைகளும் இவற்றைத் தெளிவாகப் போதிக்கின் றன.

ஆனால் சுவிஷேசக் கோட் பாட்டியக்கத்தைச் சேர்ந்தவர்களாகத் தம்மை அறிவித்துக்கொள்ளும் அநேகர் இன்று இவை மட்டும்தான் சுவிஷேசக் கோட்பாடுகள், இவற்றிற்கு மேலாக எதுவுமில்லை என்ற போக்கில் வேதத்தையே துஷ்பிரயோ கம் செய்து வருகிறார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று கூறும் சுவிஷேசக் கோட்பாட்டாளன் ரோமன் கத்தோலிக்கரை கிறிஸ்தவர் களாக அடையாளங்காண முற்படு வதையும், புற மதங்களும் கிறிஸ்து வைப் போதிக்கின்றன என்று கூறி அம்மத நூல்கள் மூலம் வேதத்திற்கு விளக்கங் கொடுக்க முனைகின்ற அநியாயத்தையும் (சாது செல்லப்பா போன்றோர்), திருமறை மூலம் தொடர்ந்து பேசும் கிறிஸ்துவின் அதிகாரத்தை நிராகரித்துவிட்டு, வேறுவிதங்களில் கிறிஸ்தவ வாழ்க்கை யையும், சபையையும் கொண்டு நடத்த முயலும் புல்லுருவித் தனத்தையும் சுவிஷேசக் கோட் பாட்டியக்கம் சகித்துக் கொள்ளாது. இவர்கள் திருமறையைப் பற்றிய சரியான அறிவைக் கொண்டிருக்க வில்லை.

ஆகவே சுவிஷேசக் கோட்பாட் டியக்கத்தின் சிறப்பான அம்சங்களை யும், அதன் உறுதியான நம்பிக்கை களையும் பற்றி நாம் சிறிது விபரமாக ஆராய வேண்டியதை இன்றைய சூழ்நிலை நிர்ப்பந்திக்கின்றது.

**கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று கூறும் சுவிஷேசக் கோட்பாட்டாளன் ரோமன் கத்தோலிக்கரை கிறிஸ்தவர்களாக அடையாளங்காண முற்படு வதையும், புற மதங்களும் கிறிஸ்து வைப் போதிக்கின்றன என்று கூறி அம்மத நூல்கள் மூலம் வேதத்திற்கு விளக்கங் கொடுக்க முனைகின்ற அநியாயத்தையும், திருமறை மூலம் தொடர்ந்து பேசும் கிறிஸ்துவின் அதிகாரத்தை நிராகரித்துவிட்டு, வேறுவிதங்களில் கிறிஸ்தவ வாழ்க்கையையும், சபையையும் கொண்டு நடத்த முயலும் புல்லுருவித்தனத்தையும் சுவிஷேசக் கோட்பாட்டியக்கம் சகித்துக் கொள்ளாது.**

## சுவிஷேசக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங்கள்

சுவிஷேசக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங்கள் யாவை? சுவிஷேசக் கிறிஸ்தவன் விசுவாசிக்கும் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? என்ற கேள்விகளுக்கு நாம் பதில் அளிக்கும்போது அவை வரலாற்றில் திருச்சபைகள் மூலம் கர்த்தரால் நமக்கு அளிக்கப்பட்ட விசுவாச அறிக்கைகளில் தெளிவாக விளக்கப் பட்டிருப்பதை நாம் மறுக்க முடியாது. இருந்த போதும் அவற்றை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

*1.* சுவிஷேசக் கிறிஸ்தவன், திருமறை தேவ ஆவியினால் அருளப்பட்டதும், தவறற்றதும், சகல அதிகாரத்துடனும் தேவசித் தத்தை எடுத்துரைக்கும் வேத வசனம்; எதைக் குறித்தும் இறுதித் தீர்ப்பு வழங்கும் முடிவான கர்த்தரின் வார்த்தை என்பதை மரணப்பிடியுடன் விசுவாசிப்பவன்.

சுவிஷேசக் கோட்பாட்டாளர் திருமறையைப் பூரணமாக நம்புபவர் கள். அது கர்த்தரின் ஆவியினால் மனிதர்களைப் பயன்படுத்தி அருளப் பட்ட தேவ வார்த்தை என்பது மட்டு மல்ல, அதில் எள்ளளவும் தவறோ, குழப்பமோ இல்லை என்பதையும் ஆணித்தரமாக விசுவாசிப்பவர்கள். அதன் தெளிவான போதனைகள் எக்காலத்திற்கும் பொறுத்தமானவை என்று நம்புபவர்கள். வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போது மான தன்மையையும் வலியுறுத்து பவர்கள். சபைப் பாரம்பரியங்கள் மூல மாகவோ, மனித ஞானத்தின் மூல மாகவோ, கெரிஸ்மெடிக் வெளிப் படுத்தல்கள் மூலமாகவோ இன்று கர்த்தர் நம்மோடு பேசுவதில்லை என்பதை உறுதியாய் நம்புபவர்கள். சுவிஷேசக் கோட்பாட்டாளன் கர்த்தரின் வெளிப்படுத்தல் முழுமை பெற்று திருமறையாக நமக்குத் தரப் பட்டுள்ளது என்பதை எவ்வித சந் தேகமுமில்லாமல் உறுதியுடன் விசு வாசிப்பவன். ஆவிக்குரிய அனைத்துத் தேவைகளையும் திருமறை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடியது என்று பூரணமாக நம்புபவன். புதிய-சுவி ஷேசக் கோட்பாட்டாளர்கள் இந்நம் பிக்கைகளையெல்லாம் என்றோ உதறியெறிந்து விட்டவர்கள்.

சுவிஷேசக் கோட்பாட்டாளன் திருமறை தெளிவானது என்பதை விசுவாசிப்பவன்; திருமறையில், அது எழுதப்பட்ட காலத்தின் கலாச் சாரத்தை அவதானிக்க முடிந்தாலும் அது எக்காலத்திற்குமுரிய தேவ வசனமாக இருப்பதால் அதனைக் காலத்திற்கேற்ற விதத்தில் பொருள் கொண்டு விளக்க முனைவது திருமறையின் அதிகாரத்தையே நிராகரிப்பதாகும் என்று நம்புபவன். திருமறை மட்டுமே தன்னை விளக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதால் புறச் சாதனங்களைக் கொண்டு அதை விளக்க முனைவது வேதத்தையே அழிக்க முனையும் செயல் என்று சுவிஷேசக் கிறிஸ்தவன் நம்புகிறான்.

கிறிஸ்தவன் திருமறையின் அனைத்துப் போதனைகளையும் விசுவாசிக்க வேண்டும்; அது பாவநிவாரணத்திற்கான வழிகளை மட்டும் காட்டாது, கிறிஸ்தவனின் இவ்வுலக வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறுகின்ற ஒரே நூலாக இருக்கின்றது. புதிய-சுவி

ஷேசக் கோட்பாட்டாளன் இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறான்.

*2. கடவுள் வழிபாடு திருமறையின் போதனையின்படி அமைய வேண்டும் என்பது சுவிஷேசக் கோட்பாட்டாளனின் ஆணித்தரமான நம்பிக்கை.*

சுவிஷேசக் கோட்பாட்டாளன் வழிபாடு, கடவுளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அது அவரது வார்த்தையின் போதனைகளின்படி அமைய வேண்டும் என்றும் விசுவாசிப்பவன். கிறிஸ்தவன், கடவுளால் ஏற்படுத்தப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளை மாற்றவோ, அவற்றோடு திருமறைக்குப் புறம்பான எதையும் சேர்க்கவோ கூடாது. கடவுளை அனுகுவதற்கு இயேசு அவனுக்கு சகல சுதந்திரத்தையும் வழங்கியிருந்த போதும், அவருக்குப் பிடித்தமில்லாதவற்றை அவருடைய சந்நிதானத்திற்குக் கொண்டு வருவதை அவர் என்றுமே அனுமதித்ததில்லை. காயீனினுடைய வழிபாடு இதனாலேயே கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கடவுள் தன்னுடைய வார்த்தையில் தமது மக்கள் தம்மை எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்று தெளிவாகப் போதித்துள்ளார். அத்தகைய ஆராதனை மட்டுமே அவருக்கு ஏற்புடையதாக அமையும்.

புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் இதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். கடவுள் வழிபாடு நல்ல முறையில் அமைவதற்கு தனது பங்கு அத்தியாவசியமானது என்பது அவனது நம்பிக்கை. தான் சுயமாகவும் தன்னிச்சையாகவும் செய்யும் காரியங்களால் மட்டுமே வழிபாட்டைச் சிறப்பானதாகவும், கடவுளுக்கு ஏற்புடையதாகவும் அமையச் செய்ய முடியும் என்று புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் நம்புகிறான். இதனால்தான் இன்று ஆராதனை, நற்செய்தி வழங்குதல் என்ற பெயரில் ஆட்டம், கூத்து, பாட்டு, கச்சேரி என்பவை கிறிஸ்தவத்தையே கேலிக்குரியதாகச் செய்து வருகின்றன. சுவிஷேசக் கோட்பாட்டாளன் இவற்றைக் கடவுளை அவமதிக்கும் செயல்களாகக் கருதுகிறான். சுத்த இருதயத்தோடும், கலங்கமற்ற கரங்களோடும் கர்த்தர் நமக்குத் தந்துள்ள கிருபையின் சாதனங்களைப் பயன்படுத்தியே அவரை வழிபட வேண்டும்

*3. சுவிஷேசக் கோட்பாட்டாளன் திருமறை போதிக்கும் அனுபவரீதியான கிறிஸ்தவத்தில் (Experimental Christianity) அசையா நம்பிக்கை கொண்டவன்.*

சுவிஷேசக் கிறிஸ்தவர்கள் வெறும் கோட்பாடுகளை மட்டும் கொண்டவர்களல்ல. கர்த்தரின் துணையோடு அக்கோட்பாடுகளை நடைமுறை வாழ்க்கையில் முற்றும் கடைப்பிடிக்க முயல்பவர்கள். வெறுமனே பெயர்க் கிறிஸ்தவர்களாக வாழ்வது அவர்களது நோக்கமல்ல. இன்று பல திருச்சபைகள் பெயர்க் கிறிஸ்தவர்களையே கொண்டுள்ளன. சம்பிரதாயமும், பாரம்பரியமுமே இச்சபைகளில் நடைமுறையில் அதிகாரம் செலுத்துகின்றனவே தவிர திருமறையல்ல. கிறிஸ்துவுக்குள் ஒருவன் பிறப்பது எப்படி என்ற அறிவே இல்லாத நிலையில் சபைகள் இயங்கி வருவதையும் இன்று நடைமுறையில் காணலாம். ஆனால் இவற்றிற்கெல்லாம் மாறாக சுவிஷேசக் கோட்பாட்டாளன் திருமறைபூர்வமான, அனுபவரீதியிலான கிறிஸ்தவத்தை நடைமுறையில் காண்பதை இலட்சியமாகக் கொண்டவன்.

திருமறை பூர்வமான கிறிஸ்தவத்திற்கு அடிப்படை, தெளிவான நற்செய்திப் பிரசங்கம் என்பது அவனது அசையா நம்பிக்கை. பாவத்தைக் குறித்தும், தேவ கோபத்தைக் குறித்தும், கிறிஸ்து இலவசமாக அளிக்கும் இரட்சிப்பைக் குறித்தும், தெளிவில்லாதவர்களும், அனுபவரீதியாக அவற்றை அறிந்திராதவர்களும் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது என்பதில் அவன் உறுதியுள்ளவன்.

**சுவிஷேசக் கோட்பாட்டாளன் திருமறை பூர்வமான, அனுபவரீதியிலான கிறிஸ்தவத்தை நடைமுறையில் காண்பதை இலட்சியமாகக் கொண்டவன்.**

அதுமட்டுமன்றி வாழ்வில் பரிசுத்தத்திற்கு அவன் முக்கியத்துவம் கொடுப்பவன். கிறிஸ்து பரிசுத்தத்திற்காகவே நம்மை அழைத்துள்ளதால் அதை வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டவன். வெறும் அறிவு மட்டும் போதாது, தாழ்மையோடு கூடிய தேவ பயத்துடன் பரிசுத்தமாக வாழ்வதை அன்றாடக் கடமையாக் கருத வேண்டும் என்பதில் வைராக்கியமுள்ளவன். இத்தகைய வைராக்கியமுள்ள மனிதர்களையே சீர்திருத்தவாதமும், தூய்மைவாதமும் உலகிற்குத் தந்தது. விட்பீல்ட், ரைல், ஸ்பர்ஜன் போன்றோர் இவற்றையே விசுவாசித்தும் போதித்தும் வந்தனர்.

சுவிஷேசக் கோட்பாட்டாளன் கடவுளோடு தனக்கிருக்கும் ஐக்கியத்திற்கு எப்போதும் முக்கியத்துவம் அளிப்பான். சபை வாழ்க்கையிலும், தன் சொந்த வாழ்க்கையிலும் பரிசுத்தத்தை நாடுவதால் எப்போதுமே மற்றவர்களின் பாராட்டை அவன் பெறுவதில்லை. அவனது வாழ்க்கை முறை பிறருக்கு உப்புச் சப்பில்லாததாகவும், கட்டுப்பாடானதாகவும் தென்படும். ஆனால், சுவிஷேசக் கோட்பாட்டாளன் கடவுளின் நியாயப்பிரமாணத்திற்கு முக்கியத்துவம் அளித்து அதன்படி வாழ முயற்சிப்பவன். நியாயப்பிரமாணத்தை மீறுதல் கர்த்தருக்கு எதிரானது மட்டுமல்ல, பரிசுத்த வாழ்க்கைக்கும் இடையூறானது என்பதில் அவன் தெளிவுள்ளவன். ஆனால் புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் நியாயப் பிரமாணத்தைக் கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டியதில்லை என்று போதிப்பவன். பரிசுத்த வாழ்க்கைக்கும் அவனுக்கும் வெகு தூரம். ஒப்புக்காக கிறிஸ்தவன் என்ற பெயரில் நடமாடும் புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளர்களின் வாழ்க்கை முறையில் இருந்து பரிசுத்தத்திற்கும் அவர்களுக்கும் எவ்வித உறவும் இல்லை என்பதை அறிந்து கொள்ள முடியும்.

*4. சுவிஷேசக் கிறிஸ்தவன் பாவத்தோடும், திருமறைக்கு ஒவ்வாத எதனோடும் கூட்டுச் சேராதவன் (Biblical Seperation).*

சுவிஷேசக் கோட்பாட்டாளர் திருமறை பூர்வமான ஐக்கியத்தை எப்போதும் வற்புறுத்தியபோதும் திருமறையின் அடிப்படையிலில்லாத கூட்டுச் சேரலை நிராகரித்து வந்துள்ளனர். இதை நாம் தனித்து வாழும் தன்மையாகத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனைய கிறிஸ்தவ சபைகளுடன் ஒத்துழைத்து, சேர்ந்து வாழ விரும்பாத சபை கிறிஸ்தவ சபையாக இருக்க முடியாது. ஆனால் அதேவேளை எந்தவித கோட்பாடுகளுக்கும் மதிப்புக் கொடுக்காமல் எவருடனும் கூட்டுச் சேரும் தன்மை கொண்ட சபை, திருமறை சார்ந்த சபையாக இருக்க முடியாது. எக்கூட்டுச் சேரலும், ஐக்கியமும் திருமறை சார்ந்ததாகவும், கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததாகவும் இருக்க வேண்டும்.

எமது மூதாதையர்களான

சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் திருமறையின் அடிப்படையிலில்லாத கூட்டுச் சேரலை எப்போதும் நிராகரித்து வந்துள்ளனர். பாவத்துடனும், தூய்மையற்ற எதனுடனும் தொடர்பு கொள்வதை வேதம் தடை செய்கிறது. பாவம் இருக்கும் இடத்தில் நாம் இருக்கக் கூடாது என்கிறது திருமறை (சங்கீதம் 1). அவிசுவாசி களுக்கும் நமக்கும் தொடர்பிருக்க முடியாது என்று பவுல் வாதிடுகிறார். 'நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? என்று கேட்கும் பவுல் 'ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவில் இருந்து பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்' (2 கொரிந்தியர் 2:16-17) என்று கூறுகிறார்.

சுவிஷேசக் கோட்பாட்டைப் பின்பற்றும் கிறிஸ்தவன், அக்கோட்பாட்டைப் பின்பற்றி அதற்காக எத்தியாகமும் செய்யத் தயங்காதவர்களுடனேயே ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வான். அவன் திருமறை பூர்வமான ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் விசுவாசிப்பவன். ஆனால் புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் சத்தியத்தின் அடிப்படையில் அமையும் ஐக்கியத்தை நாடுபவனல்ல. ஐக்கியத்தின் பெயரில் சத்தியத்தை அவன் விற்கத் தயங்க மாட்டான். சுவிஷேசக் கோட்பாட்டு சத்தியங்களை அவன் பொருட்படுத்துவதில்லை. ஐக்கியம் என்ற பெயரில் அவன் எவருடனும் சேரத் தயங்காதவன். புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் சமய சமரசப் போக்கைப் பின்பற்றுபவன். 'லிபரல்' கூட்டத்தாருடன் இதயமற்று உறவாடத் தயங்காதவன். இந்திய வேதங்களிலும் இயேசுவைக் காணலாம் என்று தமிழர்கள் மத்தியில் போதிக்கும் கூட்டத்தார் இப்போக்குடையவர்களே. அத்தோடு இவர்கள் சத்தியத்தைத் தூக்கியெறிந்துவிட்டு சபை நடத்திவரும் சமயக் குழுக்களுடன் உறவாடுவதிலும் இன்பம் காண்பவர்கள்.

சுவிஷேசக் கோட்பாட்டாளன் இத்தகையவர்களோடு உறவாட முடியாது. சபைக்காகவும், சத்தியத்திற்காகவும் உயிரையும் பணயம் வைக்கத் தயங்காத சுவிஷேசக் கோட்பாட்டாளன் மெய்யான ஐக்கியத்திற்காகப் பாடுபடுபவன். சிலவேளைகளில் பொய்யை உண்மையுடன் கலந்து விற்கும் கூட்டத்தார் நிறைந்த கால நிலவரத்தால் ஐக்கியம் இல்லாமல் அவன் தனிமையை அனுபவிக்க நேர்ந்தாலும், ஐக்கியம் என்ற பெயரில் போலித்தனமான கூட்டுச் சேரலுக்கு எப்போதுமே இடமளிக்க மாட்டான். சத்தியம் என்பது தனிமனித எண்ணத்தைப் பொறுத்தது என்று பலர் வாதிட்டு வரும் இக்காலத்தில் சுவிஷேசக் கோட்பாட்டாளன் தனிமைவாதியாக கருதப்பட்டால் அதில் வியப்பில்லை.

5. சுவிஷேசக் கோட்பாட்டாளன் கடவுளை மகிமைப்படுத்தும் பிரசங்கத்திலும், நற்செய்திப் போதனையிலும் பெரு நம்பிக்கை கொண்டவன்.

சுவிஷேசக் கோட்பாட்டாளன் பிரசங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவன். நற்செய்திப் போதனைக்குத் தேவன் கொடுத்துள்ள மகத்தான கருவியாக அதைக் கருதுபவன். பரிசுத்த ஆவியினால் பயன்படுத்தப்படும் பிரசங்கமே எவருக்கும் இரட்சிப்பை அளிக்கக்கூடிய வல்லமையைக் கொண்டுள்ளது என்று நமபுபவன். தனது முன்னோர்களைப் போலவே சுவிஷேசக் கோட்பாட்டாளனும் திருமறையைப் போதிப்பதற்கு பிரசங்கத்தையே தொடர்ந்து பயன்படுத்தி வருகிறான். புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் மனித கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திக் கேட்பவர்களைக் கவர முனைந்திருக்கும் வேளையில், சுவிஷேசக் கோட்பாட்டாளன் காலத்தால் அழியாது நிலைத்திருக்கும் கடவுளின் ஆயுதமான பிரசங்க வரம் தனக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றும் என்று நம்புகிறான்.

> **புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் சத்தியத்தின் அடிப்படையில் அமையும் ஐக்கியத்தை நாடுபவனல்ல. ஐக்கியத்தின் பெயரில் சத்தியத்தை அவன் விற்கத் தயங்க மாட்டான். சுவிஷேசக் கோட்பாட்டு சத்தியங்களை அவன் பொருட்படுத்துவதில்லை. ஐக்கியம் என்ற பெயரில் அவன் எவருடனும் சேரத் தயங்காதவன்.**


இன்று பாவத்தை உணர்த்தி, இருதயத்தைத் தகர்க்கும், அதிகாரமுள்ள, ஆவியின் வல்லமை நிறைந்த, நேரடியான பிரசங்கத்தைக் காண முடியாமலிருப்பதற்குக் காரணம் அநேக பிரசங்கிகள் வெறும் வியாபாரிகளாக இருப்பதுதான். திருமறைப் பிரசங்கி உலகப் பிரகாரமான ஒரு வியாபாரியாக இருக்க முடியாது. நற்செய்தி ஒரு விற்பனைப் பொருளல்ல. தற்காலப் பிரசங்கி ஒரு வியாபாரியைப்போல விற்பனைக் கலையைக் கற்பதிலும், புதிய வழிமுறைகளை நாடுவதிலும் காலத்தைச் செலவிடுகிறானே தவிர ஆவியில் நிலைத்திருந்து வல்லமையோடு பிரசங்கம் செய்ய முயல்வதில்லை.

சுவிஷேசக் கோட்பாட்டாளன் ஒரு தீவிரமான நற்செய்திப் பிரசங்கி. அவன் உலகப்பிரகாரமாக நற்செய்தியை அலங்காரம் செய்பவனல்ல. அவனது செய்தி உறுதியானதும் வரலாற்றால் நிரூபிக்கப்பட்டதுமாக உள்ளது. அவன் மனித சித்தத்தில் நம்பிக்கை வைக்காது நற்செய்தியின் மகிமையும், ஆவியின் செயலுமே ஒருவனைத் தேவனிடத்தில் கொண்டு வரும் வல்லமையுடையது என்று நம்புபவன். அவ்வுறுதியோடு நற்செய்தியைத் தன்னால் முடிந்தளவு உள்ளூரிலும், வெளி தேசங்களிலும் எடுத்துச் சொல்ல முயல்கிறான். ஆனால் இதற்கு எதிர்மாறாக புதிய-சுவிஷேசக் கோட்பாட்டாளன் சினிமாக் கலைஞனைப்போல மக்களைக் கவரும் பெருங்கூட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நம்பி வாழ்கிறான்.

6. சுவிஷேசக் கோட்பாட்டாளன் கிறிஸ்து நேசிக்கும் திருச்சபையில் எல்லையற்ற நம்பிக்கை கொண்டவன்.

'டிஸ்பென்ஷேசனலிசத்தின்' கர்த்தருடைய இராஜ்யத்தைப் பற்றிய தவறான போதனைகளினால் பாதிக்கப்பட்டு இன்று பல கிறிஸ்தவர்கள் கர்த்தர் தன்னுடைய திருச்சபையை விவாகரத்துச் செய்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் இன்று சபையை நிராகரித்துவிட்டு கிறிஸ்தவ நிறுவனங்களின் மூலமாகவே தனது நோக்கங்களை இவ்வுலகில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்பது இவர்களது போதனை. இதனாலேயே புதிய- சுவிஷேசக் கோட்பாடாளன் திருச்சபைக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. மாறாக சுவிஷேசக் கோட்பாட்டாளர் தனது சபையை நேசிக்கும் கிறிஸ்து, திருச்சபை மூலமாகவே பிரதானமாக தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கிறார் என்று விசு

# வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள்



*கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்ததொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையை' மறுபடியும் வெளியிட்டதோடு, திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார். இதனையே இங்கு தமிழில் விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.*

*கேள்வி 27: கிறிஸ்துவின் தாழ்மை எதில் அடங்கியுள்ளது?*

*பதில்: கிறிஸ்துவின் தாழ்மை தாழ்நிலையில் அவர் பிறந்ததிலும், நியாயப்பிரமாணத்தின் கீழ் வந்ததிலும், இவ்வுலக வாழ்வில் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்ததிலும், தேவ கோபம், சபிக்கப்பட்ட சிலுவை மரணம், ஆகியவற்றை அனுபவித்து, புதைக்கப்பட்டு, மரணத்தின் வல்லமையின் கீழ் சிறிது காலம் தொடர்ந்திருந்ததிலும் தங்கியுள்ளது.*

*(லூக்கா **2:7;** கலாத்தியர் **4:4;** ஏசாயா **53:3;** மத்தேயு **27:46;** பிலிப்பியர் **2:8;** மத்தேயு **12:40.**)*

**விளக்கக்குறிப்பு:** இக்கேள்வி நாம் ஏற்கனவே பார்த்த அநேக விடயங்களை மேலும் விளக்குகின்றது. நாம் இரட்சிப்பை அடைய வேண்டுமென்பதற்காக நம்மாண்டவர் தம்மை அதிகமாகவே தாழ்த்திக் கொண்டுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இவற்றை மீண்டும் சுருக்கமாகப் பார்ப்பது அவசியமாகிறது. கிறிஸ்து எவ்வாறு படிப்படியாகத் தம்மைத் தாழ்த்திக் கொண்டார் என்பதைப் பார்ப்போம்:

(1) கடவுள் இவ்வுலகிற்கு வந்து தம்மில் மனித சுபாவத்தை எற்றுக் கொண்டிருப்பது என்பது அதிசயமான தொன்றாகும். ஒரு மனிதன் தன்னை இவ்வாறு தாழ்த்திக் கொள்ள மாட்டான். ஆனாலும் கிறிஸ்து எமக்கு இரட்சிப்பளிப்பதற்காக தம்மை இவ்வாறாகத் தாழ்த்திக் கொண்டார். இது மனிதனுக்கும் கடவுளுக்குமிடையில் உள்ள பெரும் இடைவெளியைக் காட்டுகிறது.

(2) அத்தோடு, கிறிஸ்து இவ்வாறாக மனித உருவெடுத்தபோது மனித குலத்தின் மத்தியில் பெருமையுடன் வாழ்வதற்காக அதைச் செய்யவில்லை என்பதையும் நாம் உணர வேண்டும். ஒரு அரசனாக அவர் பிறக்கவில்லை. பணத்தையும், சமூகப் பெருமைகளையும் அவர் பெற்றிருக்கவில்லை. அவரது மானிடப் பெற்றோர்களான யோசேப்புவும், மேரியும் சாதாரண குடிமக்கள். ரோமர் தங்களது நாட்டை ஆண்டு வந்த இக்கட்டான காலத்தில் அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

(3) கிறிஸ்து, கடவுளாக இருந்து நியாயப்பிரமாணத்தை உலகிற்கு அளித்தபோதும், தாம் மனிதனாகப் பிறந்தபோது நியாப்பிரமாணத்திற்கு முழுமையாகத் தம்மை உட்படுத்திக் கொண்டார். எல்லா மனிதர்களும் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டிய அவசியமிருப்பதுபோல், கிறிஸ்துவும் அதனைப் பூரணமாகத் தம் வாழ்வில் கடைப்பிடித்தார். அத்தோடு, அவரும் தம் வாழ்வில் நம்மைப்போல் எல்லாவிதத்திலும் சோதனைக்குள்ளானார் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமக்குப் புதுமையாகத் தென்பட்டாலும் அனைத்து நீதிச்சட்டங்களையும் தொடர்ந்து கடைப்பிடித்து வாழ்வது அவருக்கு இலகுவாக இருக்கவில்லை.

(4) கிறிஸ்து நம்மைப் போல் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தார் என்று வேதம் கூறுகிறது. ஆனால் நாம் பாவம் செய்யும்போது அடையும் குற்ற உணர்வை மட்டும் அவர் அனுபவிக்கவில்லை. பசி, வருத்தம், துக்கம், வறுமை ஆகிய அனைத்தையும் அவர் அனுபவித்தார். பிறரின் ஏளனத்துக்குள்ளாகி, நீதியற்ற முறையில் வாழ்க்கையில் வெறுத்து ஒதுக்கப்பட்டார். ஏசாயா (ஏசாயா 53:4) கூறுவதுபோல், அவர் நமது பாடுகளை ஏற்றுக்கொண்டு, நமது துக்கங்களையும் சுமந்தார். அதாவது, பாவத்தைத் தன்னில் கொண்டிராத கிறிஸ்து பாவத்தின் பாதிப்புகள் அனைத்தையும் அனுபவித்தார்.

(5) கிறிஸ்து தேவ கோபத்தைத் தன்மேல் தாங்கி பாவத்தின் முழுப் பாதிப்புகளையும் சந்தித்ததில் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தார். என் தேவனே! என் தேவனே! நீர் ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று அவரி கதறியபோது அனுபவித்த அதே துன்பத்தை பாவத்தின் வீழ்ந்த மனிதர்கள் நியாயத் தீர்ப்பின்போது அனுபவிக்கப்போகிறார்கள். அந்நாளில் கிறிஸ்துவை அறியாத மக்கள் நித்திய மரணத்தை அனுபவிப்பதற்காக அவருடைய சந்நிதானத்தில் இருந்து நிரந்தரமாக அகற்றப்படுவார்கள்.

(6) கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது பாவத்திற்கான முழுத் தண்டனையையும் அனுபவித்தார். 'நாம் அவருக்குள் தேவனுடைய

நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்' (2 கொரி.5:21). கிறிஸ்து நரகத்திற்குப் போனாரா? அவர் பாவிகளைப் போல மரணத்திற்குப்பின் நரகத்தை அடையவில்லை. ஆனால் சிலுவையில் மரித்தபோது அவர் நரகத்தின் துன்பங்களை அனுபவித்தார். அத்தோடு அவர் தனது மரணத்தின் பயன்களை அடையும் அனைத்து விசுவாசிகளையும் போல் சில காலம் மரணத்தின் வல்லமையின் கீழ் வந்தார்.

எமது ஆண்டவர் இவற்றைத் தனது விருப்பப்படிச் செய்தார் என்பதை நாம் உணர வேண்டும். நமது விருப்பத்தின்படி நாம் இவ்வுலகில் பிறக்கவில்லை. எங்கு, எப்போது, பிறக்க வேண்டும், எப்பெற்றோருக்குக் குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் அதிகாரமும் எமக்கு இருக்கவில்லை. ஆனால் இயேசுவைப் பொறுத்தவரையில் தனது பிறப்பைப்பற்றி அவர் தீர்க்கதரிசிகளின் மூலம் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

பவுல் கிறிஸ்துவின் தாழ்மையைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்: 'நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. அவர் தேவனுடைய ரூபமா யிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூப மெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவை யின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்.' (பிலிப்பியர் 2:5-8).

பவுல் கிறிஸ்து, 'தேவனுடைய ரூபமாயிருந்தார்' என்று கூறும்போது அவர் பிதா, பரிசுத்த ஆவி ஆகியவர்களுடன் சமமான வல்லமையையும், மகிமையையும் கொண்டிருந்தார் என்று விளக்குகிறார். இன்னுமொரு விதத்தில் கூறப் போனால், இயேசு கடவுளாக இருப்பதால் தாம் தேவனுக்கு சமமாக இருப்பதைக் கொள்ளையாடின பொருளாகக் கருதவில்லை. ஏற்கனவே அவருக்கு சொந்தமானதொன்று கொள்ளைப் பொருளாக இருக்க முடியாது. ஆனால் கிறிஸ்து இவற்றைப் பெரிதாக எண்ணாமல் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தேவையையே பெரிதாகக் கருதினார். ஆகவே தன்னைத் தாழ்த்திக் கொண்டார்.

இயேசு மனிதனாகப் பிறந்தபோது தனது தெய்வீகத்தை இழந்துவிடவில்லை. அவர் தன்னைத் 'தாழ்த்திக்' கொண்டபோது பிதாவுடனும், பரிசுத்த ஆவியுடனும் தனக்கிருந்த சமத்துவத்தையும், மகிமையை யும் இழந்துவிடவில்லை. சிலர் இவ்வாறு தவறாகப் போதிக்கின்றனர். பிலிப்பியர் 2:7 இல் அவர் 'தம்மைத் தாமே வெறுமையாக்கி' என்றிருப்பதைத் தவறாகப் புரிந்து கொண்டோர், இயேசு மனிதனாகப் பிறந்தபோது தனது தெய்வீகத்தை இழந்துவிட்டதாகப் போதிக்கின்றனர்.

> **"இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்."**

கிறிஸ்துவின் தாழ்மை அவர் தன்னில் மனித சுபாவத்தை சேர்த்துக் கொண்டதில் தங்கியுள்ளது. தனது தெய்வீகத்தை சிறிதும் இழக்காமல் அவர் பூரணமான மனித சுபாவத்தையும் கொண்டிருந்தார். இருந்தபோதும் கிறிஸ்துவின் தெய்வீகம் சில காலம் பிறரின் கண்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது என்று கூறுவதில் தவறில்லை. பல மனிதர்கள் அவரது தெய்வீகத்தை அறியாதிருந்தார்கள் என்று வேதம் போதிக்கின்றது. அவர்களது கண்களுக்கு அது மறை பொருளாக இருந்தது. கிறிஸ்துவும் மேசியாவாக தனது அதிகார பூர்வமான பணியை ஆரம்பிக்கும் வரை தனது வல்லமையையும், மகிமையையும் காண்பிக்க வில்லை. அவர் செய்த அற்புதங்கள் அவரது தெய்வீகத் தன்மையை எடுத்துக் காட்டுவனவாக இருந்தன.

ஆகவே, கிறிஸ்து தேவன் மட்டுமல்ல, அவர் மனிதனும் கூட. தேவமனிதனாக தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பாவ நிவாரணராக அவர் தன்னைக் கல்வாரி சிலுவையிலே தாழ்த்தி மரணத்தை சந்தித்தார். எவரோ கூறியது போல், 'அவர் அவராகவே தொடர்ந்திருந்து, அவர் எவரில்லையோ அவராக மாறினார்.' இதைப் புரிந்து கொண்டால் கிறிஸ்துவின் தாழ்மையைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் பல தவறுகளை நாம் தவிர்த்துக் கொள்ளலாம்.

*கிறிஸ்தவத்தை உலகப்பிரகாரமாக மாற்றியமைக்க முனையும், 'புதிய-சுவிஷேசக் கோட்பாடு' என்ற பெயரில் உலவும் போலிப்போதனையை இனங்கண்டு கொள்ள வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமையாகின்றது. இவ்விதழின் சிறப்புக் கட்டுரையான 'சுற்றுச் சூழலால் பாதிக்கப்பட்டிருக்கும் சுவிஷேசக் கோட்பாடு' என்ற கட்டுரையை ஜெபத்தோடு வாசிக்கத் தவறாதீர்கள். உங்கள் கருத்துக்களையும், அனுபவங்களையும் ஆசிரியருக்கு எழுதலாம்.*

**The Editor**
**The Bible Lamp**
**P O Box 62-159**
**Sylvia Park**
**New Zealand**
**Fax: + 64 9 527 1522; E-mail: bala@ihug.co.nz**




**புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம்**

# சர்வ வல்லவரின் ஏகாதிபத்தியம்

*எழுதியவர்: ஆர்தர் பிங்க்*
*தமிழாக்கம்: பி. ஜெபஸ் சாமுவேல்*
*வெளியீட்டாளர்: சுவிஷேச ஊழிய நூல் நிலையம்*
*கிடைக்குமிடம்: தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்*
*4. கெல்லீஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை 600 010*

'கிறிஸ்தவப் புத்தகங்கள் நமது மக்கள் மத்தியில் பெருமளவில் விநியோகிக்கப்படாவிட்டால் நமது நாட்டிற்கு என்ன கதி ஏற்படுமோ' என்று டேனியல் வெப்ஸ்டர் 1823 இல் கூறினார். 'சத்தியம் பரப்பப்படா விட்டால் அசத்தியம் வெகுவிரைவில் பரவி விடும். சாத்தானின் கரம் வலுப்படும்' என்று அவர் தொடர்ந்து கூறினார். இவ்வார்த்தைகள் தான் எத்தனை உண்மையானது. இன்று தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் சிறிதளவான நூல்கள் மட்டுமே வெளி வருவது மட்டுமல்ல அநேகமானவை ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் துணை புரிவனவல்ல.


கைவசமிருக்கும் சிறிதளவான நூல்களையும் அநேகர் இன்று ஆர்வத்தோடு படிப்பதில்லை. கிறிஸ்தவர்கள் சிந்திக்க வேண்டிய நேரமிது. எந்நூலை ஒருவர் படித்திராவிட்டாலும் ஆர்தர் பிங்க் எழுதிய 'சர்வ வல்லவரின் ஏகாதிபத்தியம்' என்ற நூலை வாசித்திராத கிறிஸ்தவர்கள் நிச்சயம் பெரு நன்மையை இழந்தவராவர். ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் இதன் ஆங்கில மூலம் அற்புதங்கள் செய்துள்ளது. மனம் தடுமாறி, வாழ்க்கைப் பிரச்சனைகளால் தாக்குண்டு வழி தெறியாதிருந்த பலர், இதனால் தேவ சமாதானத்தை அடைந்துள்ளனர்.

கடவுள் சர்வ வல்லமையுள்ளவர். அவரது அநாதித் திட்டங்களை மீறி எதுவும் நடைபெறாது என்ற திருமறையின் தெளிவான போதனையின் அடிப்படையில் பிங்க் இந்நூலை எழுதியுள்ளார். இன்றைய உலகத்தின் காரியங்களை கண்காணிப்பவர் கடவுளா? அல்லது சாத்தானா? எங்கு பார்த்தாலும் பிரச்சனை, போராட்டம் இதற்கெல்லாம் என்ன முடிவு என்று கலக்கமடைபவர்களுக்கு இந்நூல் பேருதவி புரியும்.

இவ்வுலகத்தை அடக்கி, ஆண்டு, தனது பெரு நோக்கங்களை தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றவர் கடவுளே என்று வேதம் தெளிவாகக் கூறுகின்றது. கடவுள் தமது ஆலோசனையின்படி சகலத்தையும் கொண்டு நடத்துகிறார். அவரது இராஜ்யத்திற்கு அவரே அதிகாரி. இவ்வுண்மையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பயனடைய முடியாது. கிறிஸ்தவ வாழ்க்கையின் அற்புதத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் கடவுளின் சர்வ ஏகாதிபத்தியத்தின் மகிமையை நாம் உணர வேண்டும்.

இவ்விதழில் 'கிருபையின் போதனைகள்' என்ற பகுதியில் கடவுளின் இறைமையைக் குறித்து நாம் விளக்கியுள்ளோம். அச்சத்தியத்தை மேலும் தெளிவாக விளங்கிக்கொள்ள உதவும் நூல்களில் இது சிறப்பிடம் பெறுகிறது. இதை இன்றே பெற்று வாசித்துப் பயனடையுங்கள். இந்நூலின் 'இரட்சண்ய கிரியையிலும் சர்வ வல்லபம்'; 'செயலாற்றுவதில் கடவுளின் சர்வ வல்லபம்'; 'கடவுளின் சர்வ வல்லபமும் மனித சித்தமும்'; 'ஜெப வாழ்க்கையில் கடவுளின் சர்வ வல்லபம்'; ஆகிய பகுதிகள் மிகவும் சிறப்பானவை. இவை குறித்த அநேகருடைய கேள்விகளுக்கு தெளிவாக விடையளிக்கும் பகுதிகள்.

ஆர்தர் பிங்க் அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும் பல சபைகளில் போதகராக இருந்தது மட்டுமன்றி, கிறிஸ்தவ மகா நாடுகளில் வேத போதனைகளையும் நிகழ்த்தியுள்ளார். தன் வாழ்வின் இறுதிக் காலப் பகுதிகளை அவர் ஸ்கொட்லாந்து நாட்டில் கழித்தார். இக்காலப்பகுதியில் அவர் தனது நேரத்தை வேதபாடங்கள் தயாரிப்பதிலும், அவற்றை வெளியிடுவதிலும் செலவிட்டார். அவற்றைத் தொடர்ந்து வெளியிட அவர் அநேக கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. தன் வாழ்நாளில் அவர் வெளியிட்ட வேத பாடங்கள் இன்றும் மறுபதிப்பு செய்யப்பட்டு அநேக கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகின்றது. ஆர்தர் பிங்க் இன்று உயிரோடில்லா விட்டாலும் அவரது உயிருள்ள எழுத்துக்கள் அவர் விசுவாசித்த தேவனை நமக்குத் தொடர்ந்து அறிமுகப் படுத்தி வருகின்றன. தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள், அல்லது சுவிஷேச ஊழிய நூல் நிலையத்திற்கு எழுதி இந்நூலை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.



**. . . எண்ணங்கள் . . . எண்ணங்கள் . . . எண்ணங்கள் . . .**

## ஆணித்தரமான கருத்துக்கள்

தங்கள் வெளியீடான திருமறைத்தீபம் பத்திரிகையும், திருமறையா? திராவிட சமயமா? என்ற பத்திரிகையும் வாசிக்கக் கிடைத்தன. திருமறையின் அடிப்படையில் ஆணித்ரமான கருத்துக்களை அப்படியே எழுதியிருப்பது வரவேற்கத் தக்கது. ஐயா! கேள்வி-பதில் பகுதி, சீர்திருத்தக் கோட்பாடுகள் மற்றும் செய்திகள் எனக்கு ஆசீர்வாதமாக இருந்தன. எனக்குத் தொடர்ந்து பத்திரிகையையும் தங்களது ஏனைய படைப்புகளையும் அனுப்பி வையுங்கள். இலங்கையில் இருந்து அகதியாக வந்து தமிழகத்தில் வாழ்ந்து வருகிறேன்.

எஸ்தர் லீலா, பொல்லாச்சி, தமிழ்நாடு

## தேவையான பத்திரிகை

உங்களது பத்திரிகையை நண்பர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டேன். அதைப் படித்து கர்த்தருக்குள் ஆனந்தமடைந்தேன். ஏனெனில் செய்திகள், கட்டுரைகள், போதனைகள் தேவ வசனத்தின்படியும், மேலும் ஆழமாகத் தெளிவாகப் பகுத்துப் போதிக்கிறதாயும், அசத்தியத்தைக் கண்டு கொள்ளவும் சத்தியத்தில் வேரூன்றவும் உதவியாக இருந்தன. இப்படிப்பட்ட பத்திரிகைகள் நிச்சயமாகவே இன்றைய காலகட்டத்தில் விசுவாசிகளுக்கு அவசியம் தேவை. அற்புதங்களையும், அடையாளங்களையும் நோக்கி ஏராளமான ஜனம் ஓடுகின்றபோது, சத்தியத்தின்படி வாழ்கின்றவர்கள் அதைக்கண்டு தங்கள் நிலையைக் குறித்து தடுமாறுகின்ற வேளையில், இப்படிப்பட்ட வேத விளக்கங்கள் ஆத்தும் நங்கூரமாய் அமைகின்றன. தேவன் தாமே எச்சூழ்நிலையிலும் தமக்கென்று ஜெயமெடுக்கின்ற ஒரு கூட்டத்தைக் கொண்டவராய் இருக்கின்றார். தவறாது பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்பி வையுங்கள். எனது நண்பர்களுக்கும் அனுப்பி வையுங்கள்.

ஜெ. கே. பீட்டர் பவுல், தூத்துக்குடி, தமிழ்நாடு

## வாசகர்கள் கவனத்திற்கு !

வாசகர்களில் பலர் பத்திரிகையின் சந்தா விபரம் பற்றிக் கேட்டு எழுதியுள்ளார்கள். வேறு சிலர் எவ்விதத்தில் தாங்கள் இவ்வூழியத்திற்கு உதவமுடியும் என்றும் கேட்டுள்ளார்கள்.

பத்திரிகை பலரது அன்பூழியத்தின் துணையால் இலவசமாக வெளியிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. ஆகவே வாசகர்கள் இதனை எதுவித சந்தாவுமின்றிப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இவ்வூழியத்திற்குத் துணை செய்ய ஆர்வமுள்ளவர்கள் உங்கள் காணிக்கைகளை பத்திரிகையின் நியூசிலாந்து முகவரிக்கு வெளிநாட்டு வங்கிக் காசோலை மூலமாக அனுப்பி வைக்கலாம்.

இதை வாசித்துப் பயனடையும் அனைவரும் தொடர்ந்து எழுதும் கடிதங்கள் எமக்கு ஊக்கம் தரும். அத்தோடு ஏனையோருக்கும் இதனை அறிமுகப்படுத்துவதோடு தவறாது உங்கள் அன்றாட ஜெபத்தில் இவ்வூழியத்தை நினைவு கூறுங்கள். இதுவே வாசகர்களாகிய நீங்கள் செய்யக் கூடிய பேருதவி.




## திருமறையா? திராவிட சமயமா?

**(28 பக்கங்கள்)**

கிறிஸ்தவத்திலிருந்துதான் ஆதித்திராவிட சமயங்கள் தோன்றின என்ற தவறான போதனையைப் பரப்பி வருபவர்களின் வாதங்களை, (முக்கியமாக 'விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு' என்ற நூலை) திருமறையின் அடிப்படையில் ஆராய்கிறது இந்நூல்.

இந்நூலை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இலவசமாக அனுப்பத் தீர்மானித்துள்ளோம். சரியான முகவரியுடன் நேரடியாக எழுபவர்களுக்கு இந்நூல் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.